# மூன்றாம் பருவம்

# மூன்றாம் பருவம் பாடங்கள்

| | |
|---|---|
| **வரலாறு** | 1. பிரெஞ்சு புரட்சி (1789)<br>2. தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகள் |
| **புவியியல்** | 1. தமிழ்நாடு - வாணிபம்<br>2. தமிழ்நாடு – மக்கள் தொகை<br>3. சுற்றுச் சூழலும் அதன் தொடர்புடைய நிகழ்வுகளும்<br>4. வளங்களை பாதுகாத்தலும் நிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சியும் |
| **குடிமையியல்** | 1. தமிழகத்தின் தற்காலச் சமூகச்சிக்கல்கள் |
| **பொருளியல்** | 1.சமநிலை விலை |
| | **தொகுத்தறி மதிப்பீடு – மூன்றாம் பருவத்தேர்வு மாதிரி வினாத்தாள்** |

# வரலாறு

## 1.பிரெஞ்சு புரட்சி (1789)

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. பிரான்சின் எதேச்சதிகார மன்னராட்சி முறை மன்னரின் **தெய்வீக உரிமைக்** கோட்பாட்டின் அடிப்படையிலானது.
2. **ஸ்டேட்ஸ் ஜெனரல்** என்ற மூன்றவைகளைக் கொண்ட அமைப்பு பிரதிநிதித்துவம் கொண்ட **மரபு வழியான அமைப்பு** ஆகும்.
3. **பார்லிமெண்ட்** என்ற அமைப்பு மன்னரின் ஆணைகளைப் பதிவு செய்யும் அமைப்பாக இருந்தது.
4. பிரபுக்கள் மக்களிடமிருந்து **டைத்ஸ்** எனப்படும் வரிகளை வசூலித்தனர்.
5. **ஏழாண்டு போர், ஆஸ்திரிய வாரிசுரிமைப்** போர்களால் பிரான்சின் கருவூலம் காலியானது.
6. ரூசோவின் **சமுதாய ஒப்பந்தம்** என்ற நூல் பிரெஞ்சு புரட்சியின் மறைநூலாக அமைந்தது.
7. ரூசோவின் கருத்துப்படி சுதந்திரமாகப் பிறக்கும் மனிதனுக்குச் **சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** ஆகியவற்றிற்கான உரிமை உண்டு.
8. **மாண்டெஸ்கியூவின் கருத்துப்படி** அனைத்து அதிகாரங்களும் அரசனிடம் குவிந்திருக்கும் வல்லாட்சி தான் மக்களின் துன்பங்களுக்குக் காரணமாக அமைகிறது.
9. இங்கிலாந்தின் அதிகாரப்பிரிவினைச் சட்டம், நிர்வாகம், நீதி என்ற அரசியலமைப்பு ரீதியிலான மாற்றம் தான் மக்கள் நல அரசைத்தரும் என மாண்டெஸ்கியூவின் **சட்டங்களின் உணர்வு** என்ற நூல் கூறுகிறது.
10. 1789-ல் பிரெஞ்சு மக்கள் **மத குருக்கள், பிரபுக்கள், பொதுமக்கள்** என மூன்று பிரிவுகளாக பிரிந்திருந்தனர்.
11. **பதினாறாம் லூயி** பிரான்சில் 1614-ல் இருந்து கூட்டப்படாமல் இருந்த **ஸ்டேட்ஸ் ஜெனரல்** என்ற அவையைக் கடன் பற்றி விவாதிக்கக் கூட்டினார்.
12. மூன்றாம் பிரிவு உறுப்பினர்கள் தங்களை தேசிய மன்றமாக அறிவித்து, அரசியலமைப்பை உருவாக்கும் வரை கலையப்போவதில்லை என்று கூறிய உறுதிமொழி **டென்னிஸ் கோர்ட் உறுதிமொழி** எனப்பட்டது.
13. பாஸ்டல் சிறைச்சாலை **அரசருக்குரிய எதேச்சதிகார சின்னம்** என்று மக்களால் வெறுக்கப்பட்டதாகும்.
14. பாரீஸ் நகர மக்கள் நகர நிர்வாகத்திற்காக **பாரீஸ் கம்யூன்** என்ற அமைப்பை உருவாக்கினார்.
15. 1789 ஆகஸ்ட் 12-ஆம் நாளன்று தேசிய மன்றமானது மனிதன் மற்றும் குடிமகனது உரிமைகள் பிரகடனம் **'மாக்ன கார்ட்டா'** என்ற பேரறிக்கையை வெளியிட்டது.
16. திருச்சபையைச் சட்ட மன்ற விதிகள் மூலமாகக் கட்டுபடுத்தும் சட்ட அமைப்பு மதகுருமார்களின் **சிவில் சட்ட அமைப்பு** எனப்பட்டது.
17. திருச்சபையில் **விசுவாச உறுதிமொழி எடுப்பவர்கள், எடுக்க மறுப்பவர்கள்** என இரு பிரிவுகள் தோன்றியது.
18. பயங்கரவாதிகளின் தலைவர் **டான்டன், ரோபஸ்பியர்** தலைமையில் பொது பாதுகாப்புக் குழு நியமிக்கப்பட்டது.
19. நெப்போலியன் போனபர்ட் **பிரெஞ்சு புரட்சியின் குழந்தை** எனப்படுகிறார்.
20. 1789-ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சி தீவிரமான மாற்றங்களை கொண்டு வந்தது. இது மனித குல வரலாற்றில் ஒரு புதிய யுகத்தினைத் தோற்றுவித்தது.
21. 1794 முதல் திருச்சபையின் கட்டுபாட்டிலிருந்து அரசு விடுவிக்கப்பட்டது. சமய சார்பற்ற அரசும், சட்ட முறையும் கொண்ட கொள்கையும் உருவாக்கப்பட்டது.
22. பிரெஞ்சுப்புரட்சிக் கருத்துகளான **சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** ஆகியவை ஐரோப்பாவில் மட்டுமின்றி உலகின் பிற நாடுகளிலும் பரவின.
23. 1889-ல் பாரிசில் நடந்த கண்காட்சிக்காகப் பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டைச் சிறப்பிப்பதற்கு **ஈ.ஃபிள் கோபுரம்** கட்டப்பட்டது.
24. பிரெஞ்சு புரட்சியின் கருத்துகளால் அமெரிக்க நாட்டின் **ஆபிரகாம் லிங்கன்** மற்றும் இந்திய தேசத்தந்தை **மகாத்மா** இருவரும் ஈர்க்கப்பட்டனர்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற ஆண்டு ...........**
அ) 1749 ஆ) 1759 இ) 1779 **ஈ) 1789**

**2. ஸ்டேட்ஸ் ஜெனரல் ............... நாட்டின் பாராளுமன்றம்**
அ) இங்கிலாந்து **ஆ) பிரான்சு** இ) ரஷ்யா ஈ) இத்தாலி

**3. 'சமூக ஒப்பந்தம்' என்ற நூலை எழுதியவர் ................**
அ) வால்டேர் **ஆ) ரூசோ** இ) மான்டெஸ்கியூ ஈ) டான்டன்

**4. பிரெஞ்சுப் புரட்சி ............... மன்னரது காலத்தில் நடைப்பெற்றது.**
அ) பதிமூன்றாம் லூயி ஆ) பதினான்காம் லூயி இ) பதினைந்தாம் லூயி **ஈ) பதினாறாம் லூயி**

**5. பிரான்சின் சின்னமாக இருந்தது...............**
அ) வெர்செய்ல்ஸ் சிறை **ஆ) பாஸ்டைல் சிறை** இ) பெர்லின் சிறை ஈ) வார்னஸ் சிறை

**6. பயங்கர ஆட்சி முடிவுற்ற ஆண்டு ...............**
அ) 1790 ஆ) 1791 இ) 1792 **ஈ) 1794**

**7. "பிரெஞ்சு புரட்சியின் குழந்தை" என்று அழைக்கப்பட்டவர் ...............**
அ) பதினாறாம் லூயி ஆ) ரோபஸ்பியர் இ) வால்டேர் **ஈ) நெப்போலியன் போனபார்ட்**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. சட்டத்தின் சாரம் | - அ) செப்டம்பர் 1792- ஜூலை 1794 | |
| 2. இரண்டாம் பிரிவு | - ஆ) வால்டேர் | |
| 3. மூன்றாவது பிரிவு | - இ) வாட்டர்லூ | |
| 4. பயங்கர ஆட்சி | - ஈ) ரூசோ | |
| 5. டைரக்டர் அரசு | - உ) மாண்டெஸ்கியூ | |
| 6. நெப்போலியன் போனபார்ட் | - ஊ) பிரபுக்கள் | |
| | - எ) பொதுமக்கள் | |
| | - ஏ) 1795 -1799 | |

**விடைகள்**
1. உ
2. எ
3. ஊ
4. அ
5. ஏ
6. இ

**குறுகிய விடையளி:**

**1. பிரெஞ்சு சட்டமன்றத்தின் மூன்று பிரிவுகள் பற்றி சிறு குறிப்பு வரைக.**
1. மத குருக்கள் 2. பிரபுக்கள் 3. பொது மக்கள்

**2. டென்னிஸ் மைதான உறுதி மொழி என்பது யாது?**
1. மூன்றாவது பிரிவு உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளை விட மறுத்து வெர்செல்ஸ் அரண்மணைக்கு பக்கத்தில் உள்ள டென்னிஸ் வளாகத்தில் கூடினர்.
2. டென்னிஸ் மைதானத்தில் மூன்றாம் பிரிவு உறுப்பினர்களை ஒரு மன்றமாக அறிவித்து ஓர் அரசியலமைப்பை உருவாக்கும் வரை கலையப்போவதில்லை என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

**3. மனித உரிமைகள் அறிவிப்பு எப்போது வரையப்பட்டது? குறிப்பு வரைக.**
1. 1789-ஆகஸ்ட் 12 ஆம் நாளன்று தேசிய மன்றமானது 'மனிதன் மற்றும் குடிமகனது உரிமைகள் பிரகடனம்' வெளியிட்ட 'மாக்னா கார்ட்டா' (பேரறிக்கை) கி.பி.1215-ல் வெளியிடப்பட்டது.
2. இது 1689-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் வெளியிட்ட உரிமைகள் மசோதாவை போல மிகச்சிறப்பானதாகும்.

**4. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவு ஏதாவது இரண்டை எழுது.**
1. பிரெஞ்சு புரட்சியின் விளைவாக மன்னரின் வரம்பற்ற வல்லாட்சி ஒழிக்கப்பட்டது.
2. நிலமானிய முறை அடியோடு ஒழிக்கப்பட்டது. பண்ணை அடிமைகள் விடுதலையடைந்தனர்
3. மதச்சார்பற்ற முறையில் கல்வி மாற்றியமைக்கப்பட்டது.
4. பிரெஞ்சு புரட்சியின் விளைவாக நெப்போலியன் போனபார்ட் முன்னணிக்கு வந்தார்.

**5. நெப்போலியன் போனபார்ட் என்பவர் யார்?**
1. கார்சிகா இளைஞன் நெப்போலியன் போனபார்ட் ஆவார்.
2. பிரெஞ்சு புரட்சியின் குழந்தை என்று அழைக்கப்பட்டார்
3. 1799 முதல் 1815 வரை பிரான்சை திறமையாக ஆட்சி செய்தார்.
4. பிரான்சை வாட்டர் லூ போரில் இவர் தோல்வி அடையும் வரையில் நிலையான ஆட்சியை கொடுத்தார்.

**தலைப்பு வினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. எதேச்சதிகார ஆட்சி:**

**அ) பிரெஞ்சு அரசு எந்தக் கொள்கையின் மீது சார்ந்துள்ளது?**
தெய்வீக உரிமை கோட்பாடுகள்

**ஆ) இக் கொள்கையை ஆதரித்தவர்கள் யார்?**
திருச்சபை

**இ) 'ஸ்டேட்ஸ் ஜெனரல்' என்பது யாது?**
மூன்றவை கொண்ட அமைப்பு

**ஈ) பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் கடைசியாக எப்போது இந்த அவைக் கூட்டப்பட்டது?**
1614

**2. பாஸ்டைல் சிறைத்தகர்ப்பு**

**அ) பாஸ்டைல் சிறைத் தகர்ப்பு எப்போது நிகழ்ந்தது?**
1789 ஜீலை 14

**ஆ) எதேச்சதிகார ஆட்சியின் சின்னம் எது?**
பாஸ்டைல் சிறைச்சாலை

**இ) எந்த நாள் விடுதலை நாளாகப் கொண்டாடப்பட்டது?**
பாஸ்டைல் வீழ்ச்சியடைந்த நாள்

**ஈ) பிரெஞ்சுப் புரட்சி போக்கின் முக்கிய நிகழ்ச்சி யாது?**
பாஸ்டைல் சிறைச்சாலை தகர்ப்பு

**3. பயங்கர ஆட்சி**

**அ) தேசியப் பேரவை எப்போது கூடியது?**
1792, செப்டம்பர் மாதம்

**ஆ) தேசியப் பேரவை அறிவித்தது என்ன?**
மன்னராட்சி ஒழிக்கப்பட்டு 1792 செப்டம்பர் 21 இல் குடியரசு அறிவித்தது.

**இ) பொது பாதுகாப்புக் குழுவுக்கு யார் தலைமை தாங்கியது?**
டான்டன் மற்றும் ரோபஸ்பியர்.

**ஈ) பயங்கர ஆட்சியின் காலம் என்பது யாது?**
1792 செப்டம்பர் முதல் 1794 ஜுலை வரை

**பத்தியளவில் விடையளி:**

**1. பிரெஞ்சுப் புரட்சியின் பொருளாதாரக் காரணங்கள் யாவை?**

**பிரெஞ்சுப் புரட்சியின் பொருளாதாரக் காரணங்கள்:**

1. பிரெஞ்சு புரட்சியின் விளைவாக அப்பாவிகளான விவசாயிகள், அரசு, பிரபுக்கள், திருச்சபை ஆகிய அனைவராலும் சுரண்டப்பட்டனர்.
2. பாரம்பரியத் தொழில்கள் தேக்கமடைந்திருந்தன. எங்கும் ஏழ்மையும் பட்டினிச் சாவுகளும் காணப்பட்டன.
3. சமூகத்தின் ஏழைப்பிரிவினரின் நலன்களுக்கு எதிராக அரசனுடன் பிரபுக்களுடன் இணைந்து செயல்பட்டது.
4. நிலமானிய முறை சீரழிந்தது கொண்டிருந்தது. அதிகாரிகள் நிலங்களை தவறாக நிர்வகித்து விவசாயிகளையும் சுரண்டினர்
5. விவசாயிகள் அதிகாரிகளின் அடிமைகளாக கருதப்பட்டனர். அப்பிரபுக்களின் வரிகளும் விவசாயிகளின் மேல் திணிக்கப்பட்டது.
6. மக்களிடமிருந்து 'டைத்ஸ்' போன்ற பிற வரிகளும் வசூலிக்கப்பட்டது.
7. அரசிற்காகவும் பிரபுக்களுக்காகவும் ஊதியமின்றி உடலுழைப்பு தருமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.
8. பிரெஞ்சு அரசிற்கு உதவும் அளவிற்கு அவை செழிப்பாக இல்லை. பாரம்பரிய தொழில்கள் தேக்கமடைந்திருந்தன. பட்டினி சாவுகளும் காணப்பட்டன.
9. சமூகத்தின் ஏழைப்பிரிவினர் நலனுக்கு எதிராக அரசனுடனும், பிரபுக்களுடனும் இணைந்து செயல்பட்டது.
10. ஊழலும், ஒழுக்ககேடும் மக்களிடையே திருச்சபையை செல்வாக்கிழக்கச் செய்தன.

**2. பிரெஞ்சுப் புரட்சியில் சிந்தனையாளர்களின் பங்கை விவரி.**

1. புகழ்பெற்ற தத்துவ அறிஞர்களின் சிந்தனைகளாலும் எழுத்துக்களாலும் பிரெஞ்சு புரட்சியாளர்கள் ஈர்க்கப்பட்டனர்.
2. **வால்டேர்** என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் மூடநம்பிக்கைக்கும் திருச்சபைக்கும் எதிராக குரல் எழுப்பினார்.
3. **ரூசோ** என்ற சிந்தனையாளர் தெய்வீகக் கோட்பாட்டை ஏற்கவில்லை. அவரது "சமுதாயஒப்பந்தம்" என்ற நூல் பிரெஞ்சு புரட்சியின் மறைநூலாகும்.
4. ரூசோவின் கருத்துப்படி, சுதந்திரமாக பிறக்கும் மனிதனுக்கு சதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கான உரிமை உண்டு.
5. **மாண்டெஸ்கியூ**வின் கருத்துப்படி அனைத்து அதிகாரங்களும் அரசனிடம் இருப்பதே மக்களின் துன்பங்களுக்கு காரணமாக அமைகிறது.
6. இங்கிலாந்து மாதிரியிலான அதிகாரப்பிரிவினைச் சட்டம் நிர்வாகம் நீதி என்ற அரசியலமைப்பு மாற்றம் தான் மக்கள் நல அரசைத்தரும் என அவரது "சட்டங்களின் உணர்வு" என்ற நூல் கூறுகிறது.

**3. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் யாவை?**

1. 1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சி தீவிரமான மாற்றங்களை கொண்டு வந்தது.
2. பிரெஞ்சு புரட்சியின் விளைவாக மன்னரின் வரம்பற்ற வல்லாட்சி ஒழிக்கப்பட்டது.
3. நிலமானிய முறை அடியோடு ஒழிக்கப்பட்டது. பண்ணை அடிமைகள் விடுதலையடைந்தனர்.
4. பிரபுக்கள் மற்றும் திருச்சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவை ஏழை எளிய விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
5. 1794 முதல் திருச்சபையின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி சமயச்சார்பற்ற அரசும் சட்ட முறையும் கொண்ட கொள்கை உருவாக்கப்பட்டது.
6. பிரான்சிலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.
7. மதச்சார்பற்ற முறையில் கல்வி மாற்றியமைக்கப்பட்டது.
8. புரட்சியின் விளைவாக மிகச்சிறந்த நிர்வாகியான நெப்போலியன் போனபார்ட் முன்னணிக்கு வந்தார்.



# 2. தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகள்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. தமிழ் மற்றும் தென்னிந்திய பகுதிகளை **திராமிளா** மற்றும் **திராவிட** என்ற சொற்களால் பாலி மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள் குறிப்பிட்டன.
2. வட நாடு **ஆரியவர்த்தம்** எனவும், **தென்னாடு** திராமிளா மற்றும் திராவிட என்றும் வேறுபடுத்தி காட்டப்படுகின்றன.
3. **மாமூலனார்** போன்ற சங்ககாலப் புலவர்கள் கி.மு நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த **நந்தர்கள்** மற்றும் **மௌரியர்களின் சமகாலத்தவர்கள்** ஆவார்.
4. தென்னிந்தியாவில் **மூத்த மொழி தமிழ்** மொழியாகும். இது **2500** ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து கொண்டிருக்கும் மொழியாகும்.
5. கி.மு.500 முதல் கி.பி 1300 வரை தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு **சங்ககாலம், களப்பிரர் காலம், தமிழ் பேரரசுகளின் காலம்** என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
6. மலைச்சார்ந்த நாடுகளை ஆட்சி செய்த **குறுநில மன்னர்கள் 'வேளிர்'** எனப்பட்டனர்.
7. பொதிகை மலையை **ஆய்**, குதிரை மலையை **அதியமான்**, பரம்பு மலையைப் **பாரி** என்ற வேளிர்கள் ஆட்சி செய்தனர்.
8. சேரன் செங்குட்டுவன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கரிகால் சோழன் ஆகியோர் சங்க காலத்தின் புகழ்பெற்ற மன்னர்கள் ஆவர்.
9. களப்பிரர் காலத்தில் **வஜ்ஜிர நந்தி** என்ற சமணத்துறவி மதுரையில் திராவிட சங்கத்தை நிறுவினார்.
10. உறையூரை ஆண்ட புகழ்பெற்ற களப்பிர மன்னர் **அச்சுத விக்ரந்தா** ஆவார்.
11. சிம்ம விஷ்ணு, முதலாம் மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன் போன்ற பல்லவ மன்னர்கள், சாளுக்கியர்கள், இராட்டிரகூடர்கள், கங்கர்கள் ஆகியோரை வெற்றிக்கொண்டு பெரும் பேரரசை உருவாக்கினார்கள்.
12. பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற பிரம்மாண்டமான **சைவ கோவில்கள்** சோழர்கள் ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.
13. சங்ககால அரசு மன்னராட்சி அடிப்படையில் அமைந்திருந்தது. அரசவை **அவை, நாளவை, மன்றம்** எனவும் அழைக்கப்பட்டது.
14. **காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை** என படைகள் நான்கு விதமாக பிரிக்கப்பட்டுள்ளது.
15. **கடம்பர்** என்னும் கடற்கொள்ளையருக்கு எதிராக சேரன் செங்குட்டுவனது படையெடுப்பு, கரிகாலனது சிங்கள படையெடுப்பு ஆகிய படையெடுப்புகள் கூறப்படுகிறது.
16. போரின் போது கொள்ளையடிக்கப்பட்டவை, வணிக வரி, சுங்க வரி, உப்பு வரி, அன்பளிப்புகள், கப்பங்கள் போன்றவை அரசு வருவாய்களாகும்.
17. பிராமணர்களால் நிர்வாகம் செய்யப்பட்ட **மகாசபைகள்** எவ்வித வெளியார் தலையீடின்றி சுதந்திரமாக செயல்பட்டதுடன் பொதுவான வரிகளிலிருந்து விலக்கு பெற்றவையாக இருந்தன.
18. சோழர்களின் காலம் **மகா சபைகளின் பொற்காலம்** எனப்பட்டது.
19. **தொல்காப்பியரின் பொருளதிகாரத்தில்** சங்க கால தமிழரின் சமூக நிலை விவரிக்கப்பட்டுள்ளது.
20. தமிழ்நாட்டிலுள்ள நிலப்பகுதிகள் புவியியல் அடிப்படையில் **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை** என ஐந்திணைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
21. **ஐந்திணை மக்களின் பொதுப்பிரிவுகள்:**
    குறிஞ்சி நில மக்கள் - குறவர் (அ) வேடர்
    முல்லை நில மக்கள் - இடையர் (அ) ஆயர்
    மருத நில மக்கள் - உழவர்
    நெய்தல் நில மக்கள் - பரதவர் (அ) மீனவர்
    பாலைப் பகுதி மக்கள் - கள்வர்
22. மருத நகரங்களில் **அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்** என்ற நால்வகைப் பிரிவுகள் காணப்பட்டன.
23. **சங்ககால பெண்கள்** கல்வியறிவு பெற்றவர்களாகவும், கவிஞர்களாகவும் இருந்தனர்.
24. பல்லவர்கள் காலத்தில் பிராமணர்கள் மதத் தலைவர்களாகவும், அரசியல் மற்றும் சமூக ஆலோசகர்களாகவும் நீதிபதிகளாகவும் இருந்தனர்.
25. சோழர்களின் ஆட்சியின் இறுதியில் **வலங்கை, இடங்கை பிரிவு** தோன்றியதால் சமூகத்தில் சண்டை சச்சரவுகள் அதிகரித்தன.

26. **நாலடியார், திருக்குறள்** போன்ற சங்க இலக்கியங்கள் சாதியைக் குறிப்பிட்ட போதிலும் அதனை ஏற்கவில்லை.
27. சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன அடங்கும்.
28. சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, சீவகசிந்தாமணி, குண்டலகேசி போன்றவை ஐம்பெரும் காப்பியங்களாகும்.
29. நீலகேசி, சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் போன்றவை ஐஞ்சிறு காப்பியங்களாகும்.
30. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப்பிபந்தம், பெரிய புராணம், கம்ப இராமாயணம் போன்ற இலக்கியங்கள் **சைவ, வைணவ** சமயத்தைப் போற்றின.
31. நந்திக்கலம்பகம், மூவருலா,கலிங்கத்துப்பரணி, நன்னூல், வீரசோழியம் போன்றவை **மதச்சார்பற்ற இலக்கியங்கள்** ஆகும்.
32. மத்த விலாச பிரகசனம், கிரதார் ஜீனியம், அவந்தி சுந்தரி கதா, காவியதர்சம் போன்றவை சமஸ்கிருத இலக்கியங்களாகும்.
33. மாயோன், வேந்தன், வருணன், வலியோன், கொற்றவை போன்றவை **திணை வழியிலான செல்வாக்கு பெற்ற தெய்வங்கள்** ஆகும்.
34. சங்ககாலத்தில் **கணேசர் வழிபாடு** இல்லை.மாறாக **குரவைக்கூத்து, வெறியாட்டு** போன்ற ஆடலும் பாடலும் வழிபாட்டில் இடம் பிடித்தன.
35. சங்ககாலத்தில் **சமணம், பௌத்தம், அஜீவிகைசம்** போன்ற சமய தத்துவங்கள் தமிழ் சமுதாயத்தில் இடம் பிடித்தன.
36. சோழர் ஆட்சியின் இறுதியில் **முருக வழிபாடு** புகழ் பெற்றது. கோயில்களில் உள்ளூர் பூசகர்கள் படிப்படியாக அகற்றப்பட்டு பிராமணர்கள் பூசகர்களாக மாறினர்.
37. தமிழ் சித்தர்கள் சாதி, மூடச்சடங்குகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை அறிவுப்பூர்வமாக எதிர்த்தனர்.
38. **பாணரும் விரலியரும்** மரபு சார்ந்த இசை மற்றும் நடனக் கலைஞர்கள் ஆவர்.
39. **யாழ்** என்ற நரம்புக் கருவியையும், **குழல்** என்ற காற்றுக் கருவியையும், **முழவு** என்ற தோல் கருவியையும் இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தினர்.
40. பல்லவர்களது **குடுமியான் மலை** கல்வெட்டில் **உருத்திரச்சாரியார்** என்ற புகழ்பெற்ற இசைக்கலைஞரைப் பற்றிய செய்தியுள்ளது.
41. பல்லவர்கள் காலத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய குடைவரைக் கோயில்களின் மூலம் புதிய வகை சிற்பம் மற்றும் கட்டட கலை அறிமுகப்படுத்தப்பட்டது.
42. மாமல்லபுரக் கடற்கரை கோயில், காஞ்சி கைலாசநாதர் ஆலயம், வைகுந்த பெருமாள் ஆலயம் போன்றவை பல்லவர் கால குடைவரைக் கோவில்களாகும்.
43. சோழர்கள் காலத்தில் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய **மகா மண்டபம், அர்த்த மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம்**, கருவறை, பெரிய விமானங்கள், தளங்கள் போன்றவை கட்டப்பட்டன.
44. **தஞ்சை பிரகதீஸ்வரம், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம்** போன்றவை சோழர் கட்டிட கலைக்குச் சிறந்த சான்றுகள் ஆகும்.
45. சோழர்கால ஓவியக் கலைக்கு சான்றாக **சித்தன்னவாசல் குகைகள், காஞ்சி கைலாச நாதர் கோயில், பிரகதீஸ்வரர் கோயில்** போன்றவைகளில் மிகச் சிறந்த ஓவியங்கள் உள்ளன.
46. சோழர் காலத்திய வெண்கலத்தால் ஆன நடராசர் சிலை, சைவ, வைஷ்ணவ உற்சவ மூர்த்திச்சிலைகள், **63 நாயன்மார்களின் சிலைகள்** உலகப் புகழ் பெற்றவையாகும்.
47. சங்க இலக்கியங்களில் **எண், கணக்கு, நாழிகை, யாமம், காதம், கோல்** போன்ற அளவைகள் பயன்படுத்தப்பட்டன.
48. **கணியன்** என்பவர் வானவியல் மற்றும் ஜோதிடவியலில் வல்லவராகக் கருதப்பட்டார்.
49. சமண, பௌத்த சமயங்கள் போன்று தமிழர்களும் **தீதும் நன்றும் பிறர் தர வாரா** என்ற கருத்தைக் கொண்டுள்ளது.
50. மனிதன் **தன் விதியைத் தானே தீர்மானிக்கிறான்** என்பதில் தெளிவாக இருந்தான். இந்திய வரலாற்றில் தமிழர்களின் மரபு ஒரு புகழ் வாய்ந்த பகுதியாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. தமிழ்மொழி குறைந்தபட்சம் ............... ஆண்டுகள் தொடர்ச்சியான வரலாற்றை உடையது.**
அ) 3500 **ஆ) 2500** இ) 1500 ஈ) 4000

**2. களப்பிரர்கள்............ ஆல் வடதமிழ்நாட்டிலும் காஞ்சியில் முறியடிக்கப்பட்டனர்.**
**அ) பல்லவர்கள்** ஆ) சேரர்கள் இ) சோழர்கள் ஈ) பாண்டியர்கள்

**3. புகழ் பெற்ற இசைக் கலைஞர் உருத்ராசாரியார் பற்றி பல்லவர்களது...... கல்வெட்டு குறிப்பிடுகிறது.**
**அ) குடுமியான் மலை** ஆ) உத்திர மேரூர் இ) மாமண்டூர் ஈ) மகேந்திரவாடி

**4. பல்லவர்கள்................மொழிக்கு முக்கியத்துவம் அளித்தனர்.**
அ) தமிழ் ஆ) தெலுங்கு **இ) சமஸ்கிருதம்** ஈ) மலையாளம்

**5. சங்க காலத் தமிழர்களின் சமூக நிலையை..................விளக்குகிறது.**
அ) மணிமேகலை **ஆ) தொல்காப்பியம்** இ) பத்துப்பாட்டு ஈ) எட்டுத் தொகை

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பட்டினம் | - அ) நாடகம் | |
| 2. பாணர் | - ஆ) சமவெளி | |
| 3. கூத்து | - இ) கடற்கரைப் பகுதி | |
| 4. விரலியர் | - ஈ) காட்டுப்பகுதி | |
| 5. முல்லை | - உ) மலைப்பகுதி | |
| | - ஊ) நடனமாடுபவர் | |
| | - எ) இசைவாணர் | |

**விடைகள்**
**1. இ**
**2. எ**
**3. அ**
**4. ஊ**
**5. ஈ**

**குறுகிய விடையளி:**

**1. தமிழ் மொழியை பற்றி ஓர் குறிப்பு எழுதுக.**
1. தமிழ்மொழி 2500 ஆண்டுகளுக்கு மேல்தொடர்ந்து கொண்டிருக்கும் வரலாற்றை கொண்டது.
2. பன்முக இலக்கியவளத்தாலும் பழமையாலும் தரத்தில் உயர்ந்து செம்மொழித்தகுதியை பெற்றுள்ளது.

**2. சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட, புகழ்பெற்ற கோவில்களின் பெயர்கள் சிலவற்றை எழுதுக.**
1. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் 2. கங்கை கொண்டசோழபுரம் 3. தாராசுரம்

**3. அரசுக்குக் கிடைத்த வருவாய்கள் யாவை?**
1. வணிகவரி 2. சுங்கவரி 3. உப்புவரி 4. அன்பளிப்புகள் 5. கப்பங்கள்

**4. களப்பிரர்களைப் பற்றி ஓர் குறிப்பு எழுது.**
1. தமிழ்நாட்டை இரண்டாவதாக களப்பிரர்கள் கி.பி. 3 முதல் கி.பி.6-வது நூற்றாண்டு வரை ஆண்டனர்.
2. களப்பிரர் காலத்தில் வஜ்ஜிர நந்தி என்ற சமணத்துறவி மதுரையில் திராவிடசங்கத்தை ஏற்படுத்தினார்
3. அச்சு விக்ரந்தா உறையூரை ஆண்ட புகழ்பெற்ற களப்பிரமன்னராவார்.

**5. சித்த மருத்துவம் என்றால் என்ன?**
1. சித்தர்கள் சித்த வைத்திய முறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தனர்.
2. சித்தர்கள் தங்கள் ஆய்வுகளையும், சிகிச்சைகளையும், மருந்து தயாரித்தல், பயன்படுத்திய மூலிகைகள் பற்றி தெளிவாக எழுதி வைத்துள்ளனர்.

**6. சங்க கால இசையைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.**
1. சங்ககாலத்தமிழர்கள் தமக்கென தனியொரு இசை(பாணர்), நடனம்(விறலியர்), நாடகம்(பண் ஆடல் கூத்து) போன்ற கலைகளை உருவாக்கியிருந்தனர்.
2. யாழ் என்ற நரம்பு கருவியும், குழல் என்ற காற்றுக்கருவியும்,முழவு என்ற தோல்கருவியும் பயன்படுத்தினர்.
3. குடுமியான்மலை கல்வெட்டில் புகழ் பெற்ற இசைக் கலைஞர் உருத்ராசாரியரின் செய்தியுள்ளது.

**தலைப்பு வினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. சங்க இலக்கியம்**

**அ) இரட்டைக் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை

**ஆ) சங்க இலக்கியத்தில் எத்தனை பெருங்காப்பியங்கள் உள்ளன?**
5

**இ) எந்தத் தமிழ் இலக்கியத்தில் "போரும் காதலும்" விவரிக்கப்பட்டுள்ளது?**
எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.

**ஈ) பக்தி இலக்கியத்தை பற்றி ஓர் குறிப்பு வரைக.**
களப்பிரர்கள் காலத்தில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்கள் தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்வியபிரபந்தம், பெரியபுராணம், மற்றும் கம்பராமாயணம் ஆகும்.

**2. சங்க கால சமுதாயம்**

**அ) குறிஞ்சி நில மக்கள் யாவர்?**
குறவர் அல்லது வேடர்கள்

**ஆ) கடற்கரைப் பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?**
நெய்தல்

**இ) சங்கத் தமிழர்களின் சமூக நிலையை எந்த நூல் கூறுகிறது?**
தொல்காப்பியம்

**ஈ) ஐந்திணைகள் யாவை?**
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

**விரிவான விடையளி.**

**1. சங்க கால நிர்வாக முறையை விவரி.**

1. சங்ககாலத்தில் 'மன்னராட்சி' முறை அமைந்திருந்தது. மன்னர்கள் கட்டுப்பாடற்ற முழு அதிகாரம் பெற்று விளங்கினர்.
2. மன்னரின் அதிகாரத்தில் தலையிட எவருக்கும் அனுமதியில்லை. மன்னர் அமைச்சரவையின் ஆலோசனைக்கு மதிப்பளித்தார்.
3. அரசவை "அவை, நாளவை, மன்றம்" என அழைக்கப்பட்டது.
4. மன்னனுக்கு நிலையான படை அமைப்பு இருக்கவில்லை. போர்க்காலங்களில் கட்டாய இராணுவசேவை வலியுறுத்தப்பட்டது.
5. காலாட்படை, குதிரைப்படை, போர் யானைகள், தேர்படை எனப் படைகள் பிரிக்கப்பட்டுள்ளன.
6. முதியோர் அவைகளால் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்டன.
7. போரின் போது கொள்ளையடிக்கப்பட்டவை, வணிகவரி, சுங்கவரி, உப்புவரி, அன்பளிப்புகள், கப்பங்கள் போன்றவை அரசுக்குக் கிடைத்த வருவாய்கள் ஆகும்.
8. அரசர்கள், குறிப்பாக பாண்டியர்கள், மற்றும் சோழர்கள் விவசாயத்தை ஊக்குவித்தனர்.
9. தடுப்பணைகள் மூலம் ஆற்று நீரை சேகரித்தனர். புதிய விவசாய குடியேற்றங்களை ஊக்குவித்தனர்.
10. கடற்படையுடன் கூடிய வலிமையான, நிலையான படைகள் உருவாக்கப்பட்டன.
11. பிராமணர்களது குடியிருப்புகளான கிராமங்கள் உள்ளூர் பிராமணர்கள் அவைகளால் நிர்வாகம் செய்யப்பட்டன. அவை மகா சபைகள் எனப்பட்டன.
12. சோழர்களின் காலம் 'மகாசபையின் பொற்காலம்' என்பர். கோயில்கள் கட்டவும், பொதுப்பணிகள் செய்யவும், மக்களின் உடலுழைப்பு கட்டாயமாக்கப்பட்டது.
13. உணவு உற்பத்தியை பெருக்க கால்வாய்களும், அணைகளும் அமைக்கப்பட்டன.

**2. சோழர்களின் பண்பாட்டுப் பங்களிப்பை சுருக்கமாக எழுதுக.**

1. சங்ககாலத்தில் தமிழர்கள் தமக்கென தனியொரு இசை, நாடகம், நடனம் கலைகளை உருவாக்கியிருந்தனர்.
2. பாணரும், விரலியரும் மரபு சார்ந்த இசை நடன கலைஞர்கள் ஆவார்.
3. யாழ் என்ற இசைக்கருவியும், குழல் என்ற நரம்புக்கருவியும் இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தினர்.
4. திருவிழாக்கள் கடவுள் வழிபாடும், இசை நடனத்துடனும் ஒன்று கலந்திருந்தது.
5. புராணங்கள் கூத்துகளாகவும், கதைகளாகவும் நடிக்கப்பெற்றன.
6. பல்லவர்கள் காலத்தில் சிறந்த குடைவரைக் கோயில்கள் ஒரு புதியவகை சிற்பம் மற்றும் கட்டிடக்கலைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
7. மலைப்பாறைகளை குடைந்து புடைப்பு சிற்பங்களுடன் கூடிய மண்டபங்கள் அமைக்கப்பெற்றன. எ.கா - மகிஷாசுர மண்டபம்
8. ரதம் போன்று செதுக்கப்பட்ட ஒற்றைக் கோயில்களை அமைத்தனர். எ.கா - மாமல்லபுரம்
9. ஓவியக்கலைக்கு சான்றாக சித்தன்னவாசல் குகைகள், காஞ்சி கைலாசநாதர் கோவில், பிரகதீஸ்வரர் கோவில்கள் மிகச்சிறந்த ஓவியங்கள் உள்ளன.
10. சோழர் காலத்தில் வெண்கலத்தால் ஆன நடராசர் சிலை, சைவ வைஷ்ணவ உற்சவ மூர்த்தி சிலைகள், 63 நாயன்மார்களின் சிலைகள் உலக புகழ்பெற்றவை.

# புவியியல்

## 1. தமிழ்நாடு - வாணிபம்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. **வர்த்தகம்** என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணியாகும்.
2. உபரிப் பொருள்களை **வாங்குவதும் விற்பதும்** வர்த்தகம் எனப்படுகிறது.
3. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யும் பொருளை மற்றொரு நாட்டிற்கு வெளிநாட்டுப் பணத்திற்கு விற்பதையே **ஏற்றுமதி** என்கிறோம்.
4. துணி வகைகள், மருத்துவப்பொருட்கள், இரசாயனப்பொருட்கள், தோல்பொருட்கள், இயந்திரப் பொருட்கள், தாதுக்கள், மின்னணு பொருட்கள் போன்றவை **முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்** ஆகும்.
5. **இறக்குமதி** என்பது பலவகைப்பொருள்களையும், சேவைகளையும் வெளிநாடுகளிலிருந்து வாங்குவதாகும்.
6. எரிபொருள்கள், மின்சார இயந்திர கருவிகள், இரும்புப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள், தாவர கொழுப்பு பொருள்கள் போன்றவை **முக்கிய இறக்குமதி பொருள்கள்** ஆகும்.
7. வர்த்தகம் என்பது **உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம்** என இருவகைப்படுத்தப்படுகிறது.
8. ஒரு நாட்டின் உள்பகுதிகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் உபரிப் பொருட்களின் பொருட்கள் பரிமாற்றம் **உள்நாட்டு வணிகம்** எனப்படுகிறது. இதில் **தேசிய செலாவணி** உபயோகிக்கப்படுகிறது.
9. ஒரு நாட்டின் புவி எல்லையைக் கடந்து அயல்நாடுகளுடன் நடைபெறும் வணிகம் **பன்னாட்டு வணிகம்** எனப்படும். இது **இருதரப்பு வணிகம்** என்றும் அழைக்கப்படுகிறது.
10. **பன்னாட்டு செலாவணிகள்** உபயோகப்படுத்தப்பட்டு வர்த்தகம் நடைபெறுகிறது. **துறைமுகங்களே** இதில் முக்கிய அங்கம் வகிக்கிறது.
11. பொருட்களின் விற்பனையைக் கையாளுவதற்கும், நியாயமான விலையை நிர்ணயம் செய்வதற்கும் **21 வியாபார சங்கங்கள்** தமிழகமெங்கும் இயங்கி வருகின்றன.
12. விவசாயப் பொருட்களுக்கான **303 விற்பனை மையங்கள்** பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
13. விவசாயப் பொருட்களுக்கான விற்பனை மையங்கள் **முதன்மை, இரண்டாம் நிலை முறைப்படுத்தப்பட்ட விற்பனைக்கூடங்கள்** மற்றும் **முறைப்படுத்தப்படாத விற்பனைக்கூடங்கள்** என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
14. மாநிலத்தின் மாவட்டங்களுள் **ஈரோடு** அதிகப்படியான **34** முறைப்படுத்தப்பட்ட விற்பனைக்கூடங்களைக் கொண்டுள்ளது.
15. **கோயம்புத்தூர்** மற்றும் **தஞ்சாவூர்** மாவட்டங்கள் 21 முறைப்படுத்தப்பட்ட விற்பனை மையங்களைக் கொண்டுள்ளது.
16. விவசாயப் பொருட்களின் நேரடி கொள்முதல் மற்றும் விற்பனைக்காக உற்பத்தியாளரும் நுகர்வோரும் பயன்பெறும் வகையில் 1999-ஆம் ஆண்டு **மதுரையில் உழவர் சந்தை திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது.
17. **தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் சங்கம்** காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.
18. **தொழில் கூட்டுறவு சங்கங்கள்** தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் வணிகத்துறை கிராமத் தொழில்முனைவோர் மற்றும் கைவினைஞர்களுக்கு தேவையான விற்பனை வசதிகளை செய்து தருகிறது.
19. தமிழ்நாட்டில் மாநிலத்தொழில் வளர்ச்சி கழகமான **சிப்காட்** தொழில் வளர்ச்சிக்கும் விற்பனை ஊக்குவிக்கும் வகையில் **தொழில் மையங்கள்** மற்றும் பூங்காக்களை அமைத்துள்ளது.
20. **வர்த்தகம்** என்பது வளர்ச்சியை இயக்கும் இயந்திரம் ஆகும். இது நாட்டின் உற்பத்தியை அதிகப்படுத்துகிறது எனலாம்.
21. **அந்நிய செலாவணி** இருப்பை அதிகரிக்கவும், இரண்டு நாடுகளுக்கு இடையே தொழில்நுட்ப பரிமாற்றத்தை அதிகரிக்கவும் வர்த்தகம் உதவுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. பண்டைக் கால வர்த்தகம் என்பது …………….**

அ) மின்வர்த்தகம் **ஆ) பண்ட மாற்றுமுறை** இ) மரபுவழி முறை ஈ) பணப்புழக்க முறை

**2. ……………. பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கிறது.**

அ) ஏற்றுமதி ஆ) இறக்குமதி **இ) வாணிபம்** ஈ) போக்குவரத்து

**3. தமிழ்நாட்டில் சிறப்பான உள்நாட்டு வாணிப பரிமாற்றம் ……………. இடையே ஏற்படுகிறது.**

அ) மாநிலம் **ஆ) மாவட்டம்** இ) நாடுகள் ஈ) நகரங்கள்

**4. ………………. மாவட்டம் வெடி பொருள்களை ஏற்றுமதி செய்கிறது.**
அ) வேலூர் ஆ) விழுப்புரம் **இ) விருதுநகர்** ஈ) சிவகாசி

**பொருத்துக.**

1. ஏற்றுமதி - அ) காஞ்சிபுரம்
2. இறக்குமதி - ஆ) தூத்துக்குடி
3. டைடல் பார்க் - இ) வியாபாரச் சங்கம்
4. டான்சில்க் - ஈ) மதுரை
5. முதல் உழவர் சந்தை - உ) சென்னை

- ஊ) இயந்திரப் பொருட்கள்
- எ) மென்பொருட்கள்

**விடைகள்**
**1. எ**
**2. ஊ**
**3. உ**
**4. அ**
**5. ஈ**

**குறுகிய விடையளி:**

**1. வர்த்தகம் என்றால் என்ன?**

1. வர்த்தகம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணியாகும்.
2. உபரி பொருட்களை உள் நாட்டின் இருவேறு பகுதிகளுக்கு உபரி பொருட்களை வாங்குவதும் விற்பதுமேயாகும்.

**2. தமிழ்நாட்டின் இறக்குமதிப் பொருட்கள் சிலவற்றைக் குறிப்பிடு.**

1. எரிபொருட்கள், மற்றும் தாதுக்கள், கச்சா எண்ணெய்
2. மின்சார இயந்திரக்கருவிகள் மற்றும் உதிரிபாகங்கள்.
3. இயற்கை மற்றும் செயற்கை முத்துக்கள்
4. தாவரகொழுப்பு மற்றும் தாவர எண்ணெய் பொருட்கள்.

**3. இறக்குமதி, ஏற்றுமதியை வேற்றுமைப்படுத்து.**

| **வ.எண்** | **இறக்குமதி** | **ஏற்றுமதி** |
|---|---|---|
| 1 | இறக்குமதி என்பது பலவகைப் பொருட்களையும் சேவைகளையும் வெளிநாடுகளிலிருந்து வாங்குவது ஆகும். | ஏற்றுமதி ஒரு நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்களை மற்றொரு நாட்டிற்கும், வெளிநாட்டிற்கும் விற்பதாகும். |
| 2 | எ.கா : மின்சார இயந்திரக்கருவிகள் மற்றும் உதிரிபாகங்கள். | எ.கா : மருந்துகள் மற்றும் மருத்துவப்பொருட்கள் |

**4. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் என்பது என்ன?**

**உள்நாட்டு வாணிபம்:**

1. ஒரு நாட்டின் உள் பகுதிகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் உபரி பொருட்களின் பரிமாற்றமாகும்.
2. சாலை வழிகளும், இரயில் பாதைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**வெளிநாட்டு வாணிபம்:**

1. ஒரு நாட்டின் புவி எல்லைகளை கடந்து அயல் நாடுகளுடன் நடைபெறும் வாணிபம் ஆகும்.
2. துறைமுகங்களே முக்கிய அங்கம் வகிக்கிறது

**விரிவான விடையளி.**

**1. வர்த்தகம் ஏன் வியாபாரத்தின் இயக்க இயந்திரம் எனக் கூறப்படுகிறது?**

1. வர்த்தகம் என்பது பொருள்கள் அதிக அளவில் புழக்கத்திற்கு வர உதவுகிறது.
2. ஏற்றுமதியின் அளவில் ஒரு அதிவேக மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.
3. இரண்டு நாடுகளுக்கிடையே தொழில்நுட்ப பரிமாற்றத்தை உருவாக்குகின்றது.
4. தொழிலாளர் நல முன்னேற்றத்திற்கு வர்த்தகம் உதவுகிறது.
5. வர்த்தகம் நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகப்படுத்துகிறது.

**2. உழவர் சந்தையைப் பற்றி எழுதுக.**

1. விவசாயப்பொருட்களின் நேரடி கொள்முதல் மற்றும் விற்பனைக்காகவும், இடைத்தரகர்கள் இன்றி நுகர்வோர் பயனடையவும் முதன்முதலில் 1999 ஆம் ஆண்டு உழவர் சந்தைதிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. தற்பொழுது 103 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.
3. உழவர் சந்தை நாள் ஒன்றுக்கு ரூ.191.77 இலட்சம் மதிப்பிலான 1609 மில்லியன் டன் காய்களை விற்பனை செய்கின்றது.
4. பொருட்களை விற்பனை செய்வதற்காக வியாபார குழுமங்களும், விற்பனை கூடங்களும் கிடங்குகளை அமைத்துள்ளன.

# 2. தமிழ்நாடு – மக்கள் தொகை

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. ஒரு பகுதியில் வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கையே **மக்கள்தொகை** எனப்படுகிறது.
2. மக்கள் தொகை ஆங்கிலத்தில் **டெமோகிராபி** என அழைக்கப்படுகிறது.
3. **மக்கள் தொகை கணக்கெடுப்பு** நிறுவனம் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை பற்றிய முழு விவரங்களையும் சேகரித்து மக்கள் தொகை தொடர்பான புள்ளி விவரத்தை வெளியிடுகிறது.
4. ஆயிரம் மக்களின் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையே **கச்சா பிறப்பு** விகிதமாகும். இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை **கச்சா இறப்பு** விகிதமாகும்.
5. ஓர் ஆண்டில் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் ஒரு வயதிற்குள் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கையே **குழந்தை இறப்பு** விகிதமாகும்.
6. ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்நாள் காலத்தைக் கணக்கில் கொண்டு ஒரு நபர் சராசரியாக வாழும் காலத்தைக் கணக்கிடுவது **வாழ்நாள் மதிப்பீடு** ஆகும்.
7. மக்கள் தொகையில் ஓர் ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையே **பாலின** விகிதமாகும்.
8. மக்கள் தொகையின் கருத்தரிப்பு விகிதம் அல்லது மொத்த காலம் கருத்தரிப்பு விகிதம் என்பது தனது வாழ்நாளில் அதிகமாக ஒரு பெண்ணுக்கு பிறக்கப்போகும் **குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை** ஆகும்.
9. பிறப்பு விகிதத்திலிருந்து இறப்பு விகிதத்தை கழித்து கணக்கிடுவதன் மூலம் இயற்கையான வளர்ச்சி விகிதத்தை அறிய முடியும். இதனை விழுக்காட்டில் கணக்கிட்டால் **ஆண்டு வளர்ச்சி விகிதம்** ஆகும்.
10. தமிழ் நாட்டின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 1.1% ஆகும். இது தேசிய வளர்ச்சி விகிதத்திற்கும் குறைந்த அளவேயாகும்.
11. தமிழ் நாட்டில் மொத்த மக்கள் தொகையில் அதிக அளவான 6.4 விழுக்காட்டை **சென்னை** மாவட்டம் பெற்றுள்ளது. மிகக் **குறைந்த மக்கள்** அடர்த்தியைக் கொண்டது **பெரம்பலூர்** மாவட்டமாகும்.
12. **சமவெளிப்பகுதிகள், கடலோர சமவெளிப்பகுதிகள், மாநகரங்கள்** அதிக மக்கள் தொகையை ஊக்குவிக்கிறது.
13. **வறண்ட பகுதிகள்** மற்றும் **மலைப்பிரதேசங்களில்** மிகக் குறைந்த மக்கள் தொகையைக் கொண்டுள்ளன.
14. ஒரு பகுதியின் மக்கள் தொகையை அதன் பரப்பளவால் வகுத்தால் கிடைக்கும் எண்ணிக்கையே **மக்களடர்த்தி** எனப்படும்.
15. மாநில தலைநகரமான **சென்னை மாநகரம்** நிர்வாகம், கல்வி, தொழில்வளம், வணிகம், வர்த்தகம், பொழுதுபோக்கு ஆகிய அம்சங்களை கொண்டுள்ளதால் மிக அதிக மக்கள் தொகையைப் பெற்றுள்ளது.
16. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 51.55 விழுக்காடு ஊரகப் பகுதிகளிலும் 48.45 விழுக்காடு நகரத்திலும் வசிக்கின்றனர்.
17. தமிழ்நாட்டில் **80.09 விழுக்காடு** மக்கள் கல்வியறிவு பெற்றவராக திகழ்கின்றனர்.
18. சென்னையிலும் தூத்துக்குடியிலும் 80 விழுக்காட்டுக்கு மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்.
19. ஓர் சமூகம் அல்லது நாடு மேம்பட வேண்டுமானால் பெண்களின் ஆற்றலை உணர்ந்து அதற்கான அங்கீகாரத்தை தர வேண்டும்.
20. பெண்களுக்கான **சட்டபூர்வ அதிகாரம்** என்பது, சுயமதிப்பைப் பெண்கள் உணரச்செய்தல்,வளங்களையும் அவற்றை அணுகும் வாய்ப்புகளை தேர்ந்தெடுக்கவும் தீர்மானிக்கவும் உரிமை அளித்தல் ஆகும்.
21. தமிழக அரசு மகளிரின் மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.
22. **அறிவியல் நகரம்** பெண்களுக்கான தொழில்முனைவு முன்னேற்றத்துக்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
23. **தொழில் முனைவு விழிப்புணர்வு முகாம்கள்** நடத்துவதன் மூலம் பெண்களின் தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து ஆற்றலை நிரூபிக்கிறது.
24. **மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம்** வறுமை ஒழிப்பதற்காக தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
25. தமிழ்நாட்டில் 1989ஆம் ஆண்டு **தர்மபுரி** மாவட்டத்தில் முதன்முதலில் மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம் தொடங்கப்பட்டது.
26. ஐக்கிய நாட்டுச் சபையின் செயலாளர் கோ.ஃபி அனான் கூற்றுப்படி, **பாலின சமத்துவம்** என்பதே இலக்கு. வறுமை ஒழிப்பதற்கும், நீடித்த வளர்ச்சி மற்றும் திறமையான ஆளுமைத்தன்மை அடைவதற்கும் முன்நிறைவாகப் பாலின சமத்துவம் அமைகிறது என்று கூறுகிறார்.

27. **மனிதவளம்** என்பது பூமியின் வளங்களுக்குள் அதிக மதிப்புடைய வளமாகும்.
28. **மனிதவள மேலாண்மை** ஒவ்வொரு மனிதனுடைய தனித்தன்மையை மேம்படுத்தி அதனை நாட்டிற்கும் உலக சமாதானத்திற்கும் தன் பங்கை ஆற்ற வழிவகுக்கிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. தமிழ்நாட்டில் ……………. மாவட்டம் கல்வியறிவில் முதன்மை வகிக்கிறது.**
அ) கரூர் **ஆ) கன்னியாகுமரி** இ) சென்னை ஈ) பெரம்பலூர்

**2. மாவட்டங்களுக்குள் மிகக்குறைந்த மக்கள் அடர்த்தி உடையது …………… ஆகும்.**
அ) சிவகங்கை **ஆ) நீலகிரி** இ) கன்னியாகுமரி ஈ) திருவள்ளுர்

**3. தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1951 முதல் 2011 முடிய 60 ஆண்டுகளில்…………..நிலையை அடைந்துள்ளது.**
அ) உயர்ந்த **ஆ) இரட்டிப்பு** **இ)** குறைந்த ஈ) மாற்றமில்லாத

**4. செங்குத்தான சரிவும் அடர்ந்த காடுகளும் கொண்ட மலைப் பிரதேசம் மிக …………… மக்கள் தொகையை ஆதரிக்கின்றது.**
அ) நடுத்தரம் ஆ) அதிகம் இ) குறைந்த **ஈ) மிகக் குறைந்த**

**பொருத்துக.**

1. ஆண்டு வளர்ச்சி விகிதம் - அ) 51.55%
2. ஊரக மக்கட் தொகை - ஆ) 48.45%
3. தமிழ்நாட்டின் கல்வியறிவு விழுக்காடு - இ) 1.1%
4. இந்துக்கள் - ஈ) 80.0.9%
5. நகர மக்கட் தொகை - உ) 88%

- ஊ) 10%
- எ) 25%

**விடைகள்**
**1. இ**
**2. அ**
**3. ஈ**
**4. உ**
**5. ஆ**

**குறுகிய விடையளி.**

**1. மக்கள் தொகைப் பரவலைக் கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?**
1. மிதமான தட்ப வெப்பநிலையும் பொருளாதாரசெயல்பாட்டுக்கு ஏதுவான சூழ்நிலையையும் கொண்டுள்ளதால் அப்பகுதி அதிக மக்கள் தொகையை ஊக்குவிக்கிறது.
2. வறண்ட பகுதிகளில் பொதுவாக குறைந்த மக்கள் தொகையையே ஆதரிக்கின்றனர்.
3. செங்குத்தான சரிவையும், அடர்ந்த காடுகளையும் கொண்ட மலைப்பிரதேசம் மிக குறைந்த மக்கள் தொகையையே ஆதரிக்கின்றனர்.

**2. மகளிர் சுய உதவிக்குழு குறித்து எழுதுக.**
1. மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம் வறுமை ஒழிப்பதற்காக தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. குழு உறுப்பினர்கள் மாதம் தோறும் சிறுசேமிப்பு செய்து மொத்த பணமாக உருவாக்கி தேவைப்படும் போது தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர்.

**3. மக்கள் தொகையை வளமாகக் கருதுவதற்கான காரணங்கள் யாவை?**
1. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டில் வாழும் மக்களே மிகப்பெரிய வளமாகும்.
2. இயற்கையின் வளங்களை உபயோகமுள்ள வளங்களாக மாற்றுவது மனித வளங்களே ஆகும்.
3. மனித ஆற்றல், அறிவு, மற்றும் சக்தி இவை தனி மனிதனை மட்டுமின்றி அவன் சார்ந்த சமூகம் மற்றும் அந்த நாட்டையும் உயர்த்துகிறது.

**4. பிறப்பு விகிதத்தை இறப்பு விகிதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.**

| வ.எண் | பிறப்பு விகிதம் | இறப்பு விகிதம் |
|---|---|---|
| 1 | ஆயிரம் மக்களின் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த ஒரு குழந்தைகளின் எண்ணிக்கையே கச்சா பிறப்பு விகிதமாகும். | ஆயிரம் மக்களின் எண்ணிக்கையில் உயிர்இழந்தவர்களின் எண்ணிக்கையே கச்சா இறப்பு விகிதமாகும். |
| 2 | தமிழ் நாட்டின் பிறப்பு விகிதம் 16. 2 ஆகும் | தமிழ் நாட்டின் இறப்பு விகிதம் 7.5 ஆகும் |

**5. மனித மேலாண்மையின் முக்கிய குறிக்கோள் என்ன?**
1. மனித வளம் என்பது பூமியின் வளங்களுக்குள் அதிக மதிப்புடையதாகும்.
2. மக்கள் அமைதியுடன் மனித வளத்தை பேணிக்காக்கவேண்டும்.
3. மனிதனுடைய தனித்தன்மையை மேம்படுத்தி அதனை நாட்டிற்கும் உலக சமாதானத்திற்கும் ஏற்றவகையில் தன் பங்கை ஆற்ற வழிவகுக்கிறது.

**விரிவான விடையளி.**

**1. தமிழ்நாட்டில் மக்கள் தொகைப் பரவல் பற்றி எழுதுக.**

1. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் அதிக அளவான 6.4 விழுக்காட்டை சென்னை மாவட்டம் பெற்றுள்ளது.
2. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்கள் அதிக எண்ணிக்கையிலான மக்களை கொண்டுள்ளது.
3. மிகக்குறைந்த மக்கள் அடர்த்தி மிகக் குறைவாக உள்ள மாவட்டம் பெரம்பலூர் 0.078% ஆகும்.

**தமிழ்நாடு மாவட்ட வாரியாக மக்கள் அடர்த்தி பரவல் (2011):**

| எண்ணிக்கை / ஒரு சதுர கி.மீ | மக்கள் அடர்த்தி தன்மை | மாவட்டங்கள் |
|---|---|---|
| 400க்கும் குறைவாக | குறைந்த மக்கள் அடர்த்தி | நீலகிரி(288), இராமநாதபுரம்(320),பெரம்பலூர்(323), சிவகங்கை(324), தருமபுரி(332), புதுக்கோட்டை(348), திண்டுக்கல்(357), கிருஷ்ணகிரி(370), கரூர்(371), தூத்துக்குடி(378), அரியலூர்(317), ஈரோடு(397), திருவண்ணாமலை (399) |
| 400 முதல் 800 வரை | மிதமான மக்கள் அடர்த்தி | தேனி(433), விருதுநகர்(454), திருநெல்வேலி(458), திருப்பூர்(476), விழுப்புரம்(482), நாமக்கல்(506), திருவாரூர்(533),திருச்சிராப்பள்ளி(602),வேலூர்(656), சேலம்(663), நாகப்பட்டினம்(668), தஞ்சாவூர்(691), கடலூர்(702),கோயம்புத்தூர்(748) |
| 800க்கு மேல் | அதிக மக்கள் அடர்த்தி | மதுரை(823), காஞ்சிபுரம்(927), திருவள்ளுர்(1049), சென்னை(26903). |

**2. மகளிர் அதிகார மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை எழுதுக.**

1. தமிழக அரசு மகளிரின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்ட வந்துள்ளது.
2. அறிவியல் நகரம் பெண்களுக்கான தொழில் முனைவு முன்னேற்றத்துக்கான திட்டத்தை (EDP) செயல்படுத்தி வருகிறது.
3. தொழில் முனைவு விழிப்புணர்வு முகாம்கள் (EAP)பெண்களின் தனித்திறமைகளை வெளிக்கொணர்கிறது.
4. மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம் வறுமை ஒழிப்பதற்காக தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
5. குழு உறுப்பினர்கள் மாதம் தோறும் சிறுசேமிப்பு செய்து மொத்த பணமாக உருவாக்கி தேவைப்படும்போது தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர்.
6. தமிழ்நாட்டில் 1989 இல் தர்மபுரி மாவட்டத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.
7. தமிழ்நாட்டில் தற்போது 1.4 இலட்சம் மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகிறது.
8. சுய உதவிக் குழுவின் மூலம் பொருளாதார மேம்பாட்டினை கண்ட முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

# 3. சுற்றுச் சூழலும் அதன் தொடர்புடைய நிகழ்வுகளும்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. உயிரினங்கள் ஒன்றோடொன்று உடன்பட்டு வாழும் சூழலை **சுற்றுப்புறச்சூழல்** என்கிறோம்.
2. நகர மயமாதல், காடுகள் அழிக்கப்படுதல், சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் புவி வெப்பமயமாதல் போன்றவை முக்கிய **சுற்றுச்சூழலின் முக்கியப்பிரச்சினைகள்** ஆகும்.
3. நகரமயமாதலை விவசாயமல்லாத மற்ற தொழில்களைச் செய்பவர்களின் எண்ணிக்கை மற்றும் மிகுந்த மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டு அறியலாம்.
4. **நகரமயமாதலை ஊக்குவிக்கும் காரணிகள்**, தொழில்மயமாதல், வர்த்தக மயமாதல் மற்றும் அதிகப் போக்குவரத்து சேவைகள், தகவல் பரிமாற்றம் ஆகும்.
5. தமிழ்நாட்டில் **ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம்** ஆகிய நகரங்கள் வேகமாக தொழில் வளர்ச்சி அடைகின்றன.
6. நகரமயமாதலின் காரணமாக நகரப்பகுதிகளை சுற்றியுள்ள விவசாய நிலங்கள் மற்றும் புல்வெளிகள் ஆகியவை தொழிற்சாலை மற்றும் குடியிருப்பு பகுதியாக மாற்றப்பட்டுள்ளன.
7. எரிபொருள் தேவைக்காக மரங்களும் புதர்களும் அழிக்கப்படுவதால் பசும் புல்வெளிகள் குறைந்து மழைக்குறைவும் ஏற்படுகிறது.
8. காடுகள் அழிக்கப்படுவதால் வெப்பம் அதிகரித்தல், குறைந்த மழைப்பொழிவு, மண் அரிப்பு, பல்வேறு உயிரினங்கள் அழிந்து போதல் போன்றவை ஏற்படுகிறது.
9. பருவநிலை மாற்றமும் உயிரின வேற்றுமை அழிதலுமே **நீண்ட கால விளைவுகள்** ஆகும்.
10. காலநிலை மாற்றத்திற்கு முக்கிய காரணம் **அதிக அளவு கரியமிலவாயு** வெளியேற்றப்படுவதே ஆகும்.
11. இயற்கையில் காணப்படும் பல்வேறு உயிரினங்களாகிய தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணிய உயிரினங்கள் அனைத்தும் கூட்டாக **உயிரின வேற்றுமை** எனப்படுகிறது.
12. உயிரின வேற்றுமைகள் அழிவதற்கும், இயற்கைக்கு மாறான உயிரின நடவடிக்கைகளுக்கும் **மனித செயல்களே** முக்கிய காரணமாகும்.
13. இயற்கையான காரணங்களாலும் மனிதனுடைய செயல்பாடுகளும் தாவரங்களும் விலங்கினங்களும் அழிவதையே **உயிரின வேற்றுமை அழிந்து போதல்** என்கிறோம்.
14. உயிர்க்கோளத்தையும் உயிரின வேற்றுமையையும் பாதுகாக்க நீலகிரி வனப்பகுதியிலும், மன்னார் வளைகுடா பகுதியிலும் **பாதுகாப்பு மையங்கள்** அமைக்கப்பட்டுள்ளது.
15. காற்றில் கரியமிலவாயுவின் அளவு அதிகரித்து பசுமை விளைவில் மாற்றம் ஏற்படுவதால் பூமிக்கு அருகில் உள்ள வளிமண்டலம் வெப்பமடைதலே **புவி வெப்ப மயமாதல்** எனப்படும்.
16. புவி வெப்பமயமாதலினால் கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைட் மற்றும் **குளோரோ ஃப்ளோரோ கார்பன்** காற்றில் கலக்கும் நிலை உருவாகிறது.
17. சுற்றுச்சூழல் மாற்றத்தினால் **பவளப்பாறைகள்** நிறம் மாற்றமடைந்து அழிந்து போகத் தொடங்குகிறது.
18. புவி வெப்பமயமாதலை தடுக்க புதுப்பிக்க இயலாத எரிசக்தி வளங்களுக்கு பதிலாக புதுப்பிக்க இயலும் எரிசக்தி வளங்களை பயன்படுத்த வேண்டும்.
19. சுற்றுபுறச்சூழலில் வாழும் உயிரினங்கள் மற்றும் கட்டிட அமைப்புகளுக்கு தீமை விளைவிக்கும் பொருட்களை **மாசுபடுதல்** என்கிறோம்.
20. மாசுக்களை உருவாகும் ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு **காற்று மாசுபடுதல், நீர் மாசுபடுதல், ஒலி மாசுபடுதல்** என மூன்றாக பிரிக்கலாம்.
21. தொழிற்சாலை மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறும் **கார்பன் மோனாக்சைடு** மற்றும் **கார்பன்-டை - ஆக்சைடு** போன்ற வாயுக்கள் காற்றை மாசுபடுத்துகின்றன.
22. அதிக எண்ணிக்கையில் உள்ள வாகனங்களே நகர்ப்புறங்களில் காற்று மாசுபடுவதற்கு காரணமாகும்.
23. காற்று மாசுபடுதலால் உலக வெப்பமயமாதல், அமில மழை, ஓசோன் படலம் கரைதல், புகை மூடு பனி, சுகாதார பிரச்சினைகள் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.
24. பூச்சிக்கொல்லி, தொழிற்சாலைக் கழிவுகள், அணு ஆராய்ச்சி கழிவுகள், எண்ணெய்க் கசிவு போன்றவை **நீர் மாசுக்களின் உற்பத்தி தளங்கள்** ஆகும்.
25. நீர் மாசுபடுதலினால் நீரில் வாழும் நுண்ணுயிர்கள் அழிக்கப்பட்டு நீர்வாழ் உயிரினங்களின் **உணவுச்சங்கிலி** பாதிக்கப்படும்.
26. காலரா, மஞ்சள் காமாலை, வயிற்றுப்போக்கு மற்றும் டைபாய்டு போன்றவை நீர் மாசுபடுதலினால் பரவும் நோய்களாகும்.

27. தமிழ்நாட்டில் பாயும் பெரும்பாலான ஆறுகள் மழையில்லாக் காலங்களில் வற்றிப்போகக் கூடிய தன்மையுடையதாகும்.
28. **ஈரோடு, திருப்பூர்** மறறும் **கரூர்** பகுதிகளில் உள்ள சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது **நொய்யல்** மற்றும் **அமராவதி** ஆற்றுப்பகுதியின் நீர்ச்சூழலைப் பெருமளவு பாதித்து உள்ளது.
29. **வேலூர்** மாவட்டத்தில் பாயும் பாலாற்றின் படுகைப்பகுதியின் சூழல் நீர்க்கேட்டிற்கு அங்குள்ள **தோல் பதனிடும்** தொழிற்சாலைகளே காரணமாகும்.
30. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு பகுதிகளில் உள்ள ஏரிகளை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் **ஜெம்ஸ்** என்ற மத்திய அரசின் நிறுவனம் மூலம் கண்காணிக்கிறது.
31. **நிலம் மாசுபடுவது** என்பது திடக்கழிவினால் நிலம் தூய்மை கெடுவதேயாகும்.
32. **பூச்சிக்கொல்லிகள்** மனிதனது மத்திய நரம்பு மண்டலம், நுரையீரல் மற்றும் இனப்பெருக்க உறுப்புகளையும் பாதிக்கிறது.
33. தேவையில்லாத மற்றும் பொறுத்துக்கொள்ளாத முடியாத ஒலியையே **ஒலி மாசுபாடு** என்கிறோம்.
34. ஒலி மாசுபாடு கேட்கும் திறன் இழப்பு, மன அழுத்தம் மற்றும் உயிரினங்களின் இனப்பெருக்கத்தினை வெகுவாக குறைக்கிறது.
35. தமிழக அரசாங்கம் **தேசிய பசுமைக்குழு** என்ற அமைப்பை நிறுவி குழந்தைகளிடம் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்துள்ளது.
36. மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட **புவி நாள், உலக சுற்றுச்சூழல் தினம், ஓசோன் தினம்** ஆகியவை கொண்டாடப்படுகிறது.
37. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சென்னையில் ஆலந்தூர், மாதவரம் மற்றும் அம்பத்தூர் மற்றும் நீலகிரி, திண்டுக்கல், பழனி, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.
38. **வீட்டுச் சிட்டுக்குருவிகள்** தற்போது அதிக அளவில் காணப்படாததற்கு காரணம் **மின்னஞ்சல் கோபுரங்கள்** வெளியிடும் மின் அலைகளே ஆகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. உயிரினங்கள் ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் உயிரினச் சூழலை ............... என்று கூறுகிறோம்.**
அ) உயிரினச்சூழல் **ஆ) சுற்றுச்சூழல்** இ) நிலப்பகுதி ஈ) உயிரினப்பகுதி

**2. மனிதனால் காடுகள் அழிக்கப்படுவதை ............... என்று கூறுகிறோம்.**
அ) காடுகள் வளர்த்தல் **ஆ) காடுகள் அழித்தல்** இ) பயிரிடுதல் ஈ) சிதறுதல்

**3. சுற்றுச்சூழல் உயிரினங்கள் அழிவதை .................. என்று கூறுகிறோம்.**
**அ) உயிரினங்கள் அழிதல்** ஆ) காடுகள் அழிதல் இ) அமில மழை ஈ) உயிரின வேற்றுமை

**4. அதிகளவு செயற்கை இரசாயன உரங்கள் உபயோகிப்பதால் .................. தரம் குறைகிறது.**
அ) காற்று **ஆ) மண்** இ) ஆறுகள் ஈ) கடல்

**பொருத்துக.**

| | |
|---|---|
| 1. புவி வெப்பமடைதல் | - அ) பூச்சி கொல்லிகள் |
| 2. காடுகளை அழித்தல் | - ஆ) காற்று மாசடைதல் |
| 3. வாகனங்கள் | - இ) தடை செய்யப்படாத ஆக்கிரமிப்புகள் |
| 4. நீர் மாசடைதல் | - ஈ) கரியமில வாயு |
| 5. நகர மயமாதல் | - உ) கடலோர வெள்ளம் |
| | - ஊ) நீர் |
| | - எ) நெரிசல் |

**விடைகள்**
1. **ஈ**
2. **உ**
3. **ஆ**
4. **அ**
5. **இ**

**குறுகிய விடையளி:**

**1. சுற்றுச் சூழல் பிரச்சனைகள் யாவை?**
1. நகரமயமாதல் 2. காடுகள் அழிக்கப்படுதல் 3. சுற்றுச்சூழல் மாசுபடுதல் 4. புவி வெப்பமயமாதல்

**2. புவி வெப்பமயமாதல் என்றால் என்ன?**
காற்றில் கரியமிலவாயுவின் அளவு அதிகரித்து பசுமை விளைவில் மாற்றம் விளைவதால் அருகிலுள்ள வளிமண்டலம் வெப்பமடைதலே புவி வெப்பமயமாதலின் முக்கிய காரணம் ஆகும்.

**3. காடுகள் அழிக்கப்படுதல் என்றால் என்ன?**
1. மரங்கள் வெட்டப்படுவதே காடுகள் அழிக்கப்படுவதாகும்.
2. மரங்கள் வெட்டப்படுவதால் குறைந்த மழைப்பொழிவு, மண் அரிப்பு ஆகியன ஏற்படுகின்றன.

**4. பைங்குடில் வாயுக்கள் (Green house gases) என்று அழைக்கப்படும் பசுமை வீட்டு விளைவு வாயுக்கள் சிலவற்றைக் கூறு.**
1. கரியமில வாயு 2. மீத்தேன் 3. நைட்ரஸ் ஆக்ஸைட் 4. குளோரோ.ஃப்ளோரோ கார்பன்

**5. மாசுபடுதல் என்றால் என்ன?**

1. சுற்றுப்புற சூழலில் வாழும் உயிரினங்கள் மற்றும் கட்டிட அமைப்புகளுக்கு தீமை விளைவிக்கும் பொருட்களை மாசுபடுதல் என்கிறோம்.
2. மாசுபடுத்தும் எந்தப் பொருளையும் மாசுக்கள் என்கிறோம்.

**6. நகரமயமாதல் என்றால் என்ன?**

1. நகரமயமாதலை விவசாயமல்லாத மற்ற தொழில்களை செய்பவர்களின் எண்ணிக்கை மற்றும் மிகுந்த மக்கள் தொகை அடர்த்தியை கொண்டு அறியலாம்.
2. சென்னை நகரத்திற்கு அருகாமையில் இருப்பதனாலும் அதிவேகமாக நகரமயமாக்கப்பட்டிருக்கிறது.

**7. உயிரின வேற்றுமையை அச்சுறுத்துபவை எவை?**

1. இயற்கையாகவும், மனிதனுடைய செயல்பாடுகளினாலும் தாவரங்களும் விலங்குகளும் அழிந்து போவதையே உயிரின வேற்றுமை அழிந்து போதல் என்கிறோம்.
2. தடுக்கப்படாத வர்த்தக நோக்கோடு அழிக்கப்படும் காடுகள், கடலோரப்பகுதிகள், சதுப்பு நிலங்கள், மற்றும் உயிரினங்கள் வாழுமிடங்களை மாற்றியமைத்தல் உயிரின வேற்றுமையை பாதிக்கின்றன.

**8. நிலம் மாசுபடுவதற்கான ஆதாரங்கள் எவை எவை?**

1. தொழிற்சாலை கழிவுகளும், விவசாயக்கழிவுகளும் நகர்புறத்திலிருந்து வரும் திடக் கழிவுகளும் ஒரு இடத்தில் குவித்து வைப்பதன் மூலமாக நிலம் மாசுபடுகிறது.
2. செயற்கை இரசாயன உரங்களும், பூச்சிகொல்லிகளும் உபயோகிப்பதால் அவை மண்ணை மக்க வைக்கும் பாக்டீரியாவை அழிக்கின்றது.

**விரிவான வார்த்தைகளில் விடையளி.**

**1. புவி வெப்பமயமாதலின் விளைவுகள் என்ன?**

1. வெப்பக்காற்றும் மாறுபட்ட பருவ நிலையினால் ஏற்படும் நோய்கள் மற்றும் வட, தென் துருவங் கடல் பகுதிகள் வெப்பமடைகின்றன.
2. பனி ஆறுகள் உருகுவதால் கடல் மட்டம் உயர்ந்து கடலோர பகுதிகளில் வெள்ளபெருக்கு ஏற்படுகிறது.
3. சுற்றுச்சூழல் மாற்றத்தினால் பவளப்பாறைகள் நிறம் மாற்றமடைந்து அழிந்து போக தொடங்குகின்றன.
4. அடிக்கடி ஏற்படும் வறட்சி, தீ, மற்றும் அதிக அளவு பனிப்பொழிவு.

**2. உயிரினங்களின் பாதுகாப்பு மையங்களின் குறிக்கோள்களை எழுது.**

1. மரபு வேற்றுமை உடைய பல்வேறு உயிரினங்களை அது வாழும் சூழ்நிலையில் எந்தவித இயற்கை நிலை மாறுபாடு இல்லாமல் பாதுகாத்தல்.
2. உயிரின பாதுகாப்பு மையங்கள் நிலைத்த வளர்ச்சியை செயல்படுத்தும் ஒரு மாற்றுத்தீர்வாக பயன்படுகிறது.
3. உயிர் கோளத்தையும், அதன் உயிரின வேற்றுமையையும் பாதுகாக்க நீலகிரி வனப்பகுதியிலும் மன்னார் வளைகுடா பகுதியிலும் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**3. தமிழ்நாட்டின் நீர் மாசுபட்டுள்ள இடங்களைக் குறிப்பிடு. அரசு இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?**

1. நிரந்தரமற்ற நீர் வளத்தின் காரணமாக தோல் தொழிற்சாலைகள், துணி தொழிற்சாலைகள் மருத்துவ கழிவுகளை ஆற்றுப்பகுதியில் கொட்டிவிடுகின்றன.
2. ஈரோடு, திருப்பூர்,மற்றும் கரூர் பகுதிகளில் உள்ள சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது நொய்யல் மற்றும் அமராவதி ஆற்றுப்படுகையில் நீர் சூழலை பெரிதும் பாதிக்கின்றது.
3. காவிரி ஆற்றங்கரையோரத்தில் உள்ள 11 நகரங்களும், பாலாற்றங்கரையில் 6 நகரங்களும், வைகை ஆற்றங்கரையில் 5 நகரங்களும், தாமிரவருணி ஆற்றங்கரையில் 3 நகரங்களும் நீரை மாசடைய செய்துள்ளன.

**நீர் மாசுபாட்டை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கைகள்:**

1. நதிக்கரை பகுதியில் அதிகளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் முழுத்தடை விதித்துள்ளது.
2. அதிகளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்க தனி கண்காணிப்பு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அமைத்துள்ளது.
3. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு பகுதிகளில் உள்ள ஏரிகளை கண்காணிக்க தனிப்பிரிவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் 'ஜெம்ஸ்' என்ற மத்திய அரசின் நிதி பெற்ற நிறுவனத்தின் மூலம் கண்காணிக்கின்றது.
4. சென்னை நகர நதி பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கால்வாய்கள் மறு சீரமைக்கப்படுகின்றன.

**4. பாழ்பட்டு வரும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மனிதனின் பங்கு என்ன?**

1. இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை கடைபிடித்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும்.

2. தேவைப்படாத நேரங்களில் மின் விளக்குகள் மற்றும் வீட்டு உபயோக மின் சாதனங்களை அணைத்து வைத்திருக்க வேண்டும்.
3. போக்குவரத்தில் எரிபொருளை சேமிக்க வேண்டும். இயற்கை வளங்களை தேவைக்கு அதிகமாக உபயோகிப்பதை கட்டுப்படுத்த வேண்டும்.

**5. காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் என்ன?**

1. பருவநிலை மாற்றமும், உயிரின வேற்றுமை அழிந்து போதலுமே நீண்ட கால விளைவுகளாகும். காலநிலை மாற்றத்திற்கு கரியமில வாயு வெளியேற்றப்படுவதே ஆகும்.
2. அதிகரிக்கும் கரியமில வாயுவினால் புவிவெப்பம் அதிகமாகி பருவநிலை மாற்றம் ஏற்படுகின்றன.
3. காடுகள் அழிக்கப்படுவதால் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் அழிவிற்குள்ளாகின்றன.
4. காடுகள் குறைந்த வருவதால் மக்கள் அதிக அளவு இயற்கை உரங்களை விடுத்து இரசாயன உரங்களை உபயோகிக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.
5. ஆடு மாடுகளுக்கு தேவையான உணவு குறைவதால் நாளடைவில் அதன் எண்ணிக்கையும் குறைகிறது.
6. பசுமையான காட்டுப்பகுதிகள் வெட்டப்படுவதால் மண் அரிப்பு ஏற்பட்டு மண் வளம் குறைகிறது.
7. காட்டுப்பகுதிகள் வெட்டப்படுவதால் நிலச்சரிவு ஏற்படுகிறது.

# 4. வளங்களை பாதுகாத்தலும் நிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சியும்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. இயற்கை வளங்களை காத்தல் என்பது திட்டமிட்ட முறையில் **வளங்களை பாதுகாத்தல்** ஆகும்.
2. இயற்கை வளங்களை பராமரித்தல் என்பது வளங்களை நீண்ட கால பயன்பாட்டிற்காகத் தகுந்த முறையில் **சமநிலை மாறாமல் பராமரித்தல்** ஆகும்.
3. கம்பம் பள்ளத்தாக்கு, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரத்தின் சில பகுதிகளில் காற்றால் மண் அரிப்பு அதிகம் ஏற்படுகிறது.
4. **மண் அரிப்பை தடுத்தல்** மற்றும் **மண் வளத்தை தக்க வைத்தல்** போன்ற வழிகளில் மண்வளம் பாதுகாக்கப்படுகிறது.
5. **சொட்டு நீர்ப்பாசனம்** என்பது நீர்வளப்பாதுகாப்பின் ஓர் முறையாகும். **காடுகளை வளர்த்தல்** பாதுகாத்தலின் ஒரு முக்கிய முறையாகும்.
6. விலங்குகளை வளர்த்து வருடத்தின் குறிப்பிட்ட ஒரு பருவத்தில் மட்டும் அதன் ரோமங்களை எடுத்தல் விலங்கினப் பாதுகாப்பாகும்.
7. காட்டுப்பகுதியைப் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியாக அறிவிப்பது **பராமரித்தல்** ஆகும்.
8. **நீர்க்கசிவுக் குட்டைகள்** அமைத்து நிலத்தடி நீரைப் பாதுகாத்தல் பராமரித்தலின் முக்கிய அம்சமாகும்.
9. அழியும் நிலையிலுள்ள விலங்குகளை வளர்த்து இனப்பெருக்கம் செய்ய உதவியாக இருப்பது பராமரித்தலாகும்.
10. புலிகளை பாதுகாக்க **ப்ராஜக்ட் டைகர்** திட்டமும் யானைகளை அழிவிலிருந்து பாதுகாக்க **ப்ராஜக்ட் யானை** என்ற பாதுகாப்பு திட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
11. தமிழகத்தில் **மன்னார் வளைகுடா, நீலகிரி, அகத்தியர் மலை** போன்ற பகுதிகளில் உயிர்கோள இருப்புகள் காணப்படுகின்றன.
12. பனங்கொட்டை செறவி, மட்டி மூக்கு செறவி மற்றும் கிலுவாய் வாத்து போன்றவை பிற நாட்டிலிருந்து குளிர்காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஆண்டு தோறும் வரும் பறவைகள் ஆகும்.
13. **சிப்கோ இயக்கம்** போன்று **'அபிக்கோ'** என்ற இயக்கம் கர்நாடக மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் பிரபலமான முழக்க வாசகம் **'பாதுகாக்க, வளர்க்க, விவேகமாக உபயோகிக்க'** ஆகும்.
14. 1977-ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் **'மனிதனும் உயிர்க்கோளமும்'** என்ற திட்டத்தினை உருவாக்கியது.
15. **உயிர்க்கோள சேமிப்பு பெட்டகம்** என்பது ஒரு பாதுகாக்கப்பட்ட தனிப்பட்ட புவிப்பகுதிகளின் உலகளாவிய வலை அமைப்பாகும்.
16. உயிர்க்கோள சேமிப்பு பெட்டகத்தின் மாதிரி செயல்பாடுகள் நன்கு பாதுகாக்கப்பட்ட மையப்பகுதி, கல்வி பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படும் செயல்பாட்டுப்பகுதி ஆகியன அடங்கும்.
17. சுற்றுலாவுக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுத்தப்படும் மாற்றமடையும் வெளிப்பகுதி **உயிர்க்கோள சேமிப்பு** பெட்டகத்தின் செயல்பாடுகளுள் அடங்கும்.
18. தமிழ்நாட்டில் நீலகிரி, மன்னார் வளைகுடா, அகத்திய மலை போன்றவை **மூன்று உயிர்க்கோள சேமிப்பு பெட்டக பகுதிகள்** ஆகும்.
19. தமிழ்நாட்டில் மருத்துவ தாவரங்களை பாதுகாக்க வட்டார தமிழ்நாடு வனத்துறை, டென்மார்க்கின் உலகளாவிய வளர்ச்சி குழுமம் போன்ற அமைப்புகள் முனைந்துள்ளன.
20. ஆறு அடி ஆழத்தில் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீர் தேங்கிய பகுதியைச் **சதுப்பு நிலம்** என்கிறோம்.
21. **நீர் பிரிமேடு** என்பது அதிக மழைப்பொழிவின் போதும் ஆறுகள், ஏரிகள் நிரம்பி வழியும் போது மட்டுமல்லாது வறண்ட காலங்களிலும் தொடர்ந்து தேவையான நீர் கிடைக்கும் படி செய்வதாகும்.
22. **மழைநீர் சேமிப்பு முறை, சிறுதடுப்பு அணைகள் கட்டுதல்** ஆகியவை மழைநீர் வீணாவதைத் தடுத்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வழி செய்கின்றன.
23. தமிழக வனத்துறை கரிஞ்சாவில்(புங்கன்) இருந்து தயாரிக்கும் உயிர் எரிபொருள் **எஸ்டரிபிகேஷன் நிலையங்கள்** மூன்று ஓசூரிலும், தூத்துக்குடியிலும் அமைந்துள்ளது.
24. **எஸ்டரிபிகேஷன்** என்பது இரு எதிர்மாற்ற செயல்களுக்கு இடையே உண்டான இரசாயன விளைவின் மூலம் உருவாகும் ஒரு பொருளை குறிக்கின்றது.
25. வாசனைத் திரவிய தொழிற்சாலைகளில் அருமையான வாசனை அளிப்பதால் **எஸ்டர்** பயன்படுத்தப்படுகிறது.
26. **காட்டாமணக்கு, வேம்பு, கரிஞ்சா (புங்கன்)** விதைகளில் இருந்து உயிர் எரிசக்தி தயாரிக்கப்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. தமிழ்நாட்டின் கம்பம் பள்ளத்தாக்கில் ……………… வகை மண் அரிப்பு ஏற்படுகிறது.**
**அ) காற்று** ஆ) ஆறு இ) பனியாறு ஈ) அலை

**2. காட்டுப்பொருள்கள் சீராகக் கிடைக்க ஒரு பகுதியில்…………… பங்கு காடுகளாக இருக்கவேண்டும்.**
அ) நான்கில் மூன்று ஆ) மூன்றில் இரண்டு **இ) மூன்றில் ஒன்று** ஈ) ஐந்தில் ஒன்று

**3. விலங்குகளை வளர்த்து வருடத்தின் ஒரு பருவத்தில் மட்டுமே அதன் ரோமங்களை எடுத்து உபயோகித்தல் …………………… ஆகும்.**
**அ) பாதுகாத்தல்** ஆ) பராமரித்தல் இ) காப்பாற்றுதல் ஈ) அழித்தல்

**4. விலங்குகளை அதன் வாழும் இடத்திலேயே பாதுகாத்தல் ……………… ஆகும்.**
அ) பராமரித்தல் **ஆ) சரணாலயம்** இ) பூங்கா ஈ) மிருக காட்சி சாலை

**5. பனங்கொட்டை செறவி, கிலுவாய் வாத்து மற்றும் மட்டி மூக்கு செறவி ஆகியவை ……….. பறவைகள்**
**அ) இடம் விட்டு இடம் பெயரும்** ஆ) சுதேசி இ) வட்டாரம் ஈ) உள்நாடு

**பொருத்துக.**

1. மன்னார் வளைகுடா - அ) புலிப் பாதுகாப்பகம்
2. கோடியக்கரை - ஆ) யானைப் பாதுகாப்பகம்
3. அகத்திய மலை - இ) கடல்சார் பூங்கா
4. முதுமலை - ஈ) பறவைகள் சரணாலயம்
5. முண்டந்துறை - உ) உயிர்கோளச் சேமிப்புப் பெட்டகம்
   - ஊ) பாதுகாக்கப்பட்ட காடுகள்
   - எ) அணில் சரணாலயம்

**விடைகள்**
**1. இ**
**2. ஈ**
**3. உ**
**4. ஆ**
**5. அ**

**குறுகிய விடையளி:**

**1. எல்லா வளங்களையும் ஏன் பாதுகாத்து பராமரிக்க வேண்டும்?**

எதிர்கால சந்ததியினர் அனைத்து உபயோகத்திற்கும் இயற்கை வளங்களையே சார்ந்து வாழ வேண்டியுள்ளது. எனவே இயற்கை வளங்களை திட்டமிட்ட முறையில் பாதுகாத்து பயன்படுத்த வேண்டும்.

**2. பாதுகாத்தல், பராமரித்தல் - வேறுபடுத்திக் காட்டுக.**

| வ.எண் | பாதுகாத்தல் | பராமரித்தல் |
|---|---|---|
| 1 | காடுகளை வளர்த்தல் பாதுகாத்தலின் முறை ஆகும் | காட்டுப் பகுதியை பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியாக அறிவிப்பது பராமரித்தல் ஆகும். |
| 2 | சொட்டு நீர் பாசனம் நீர் வளப் பாதுகாப்பின் ஓர் முறையாகும். | நீர் கசிவு குட்டைகள் அமைத்து நிலத்தடி நீரை பாதுகாத்தல் பராமரித்தலின் அம்சமாகும். |
| 3 | விலங்குகளை அதன் வாழும் சூழ்நிலையிலேயே வளர்ப்பது ஒரு முறையாகும். | புவியில் ஒரு பகுதியை பெட்டகமாக பாதுகாத்தல் பராமரித்தலின் ஒரு முறையாகும். |

**3. பாதுகாக்கப்பட வேண்டிய மருத்துவத் தாவரப்பகுதி (MPCA) மருத்துவ தாவர அபிவிருத்தி பகுதி (MPDA) –வேறுபடுத்திக் காட்டுக.**

| வ.எண் | பாதுகாக்கப்படவேண்டிய மருத்துவத் தாவரப்பகுதி (MPCA) | மருத்துவ தாவர அபிவிருத்தி பகுதி (MPDA) |
|---|---|---|
| 1 | தமிழக வனத்துறை அரசுசாரா நிறுவனங்களின் உதவியோடு தாவரங்களை பாதுகாக்க வேண்டிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. | அப்பகுதிவாழ் மக்களின் துணையோடு செயல்படுகின்றன. |
| 2 | பாதுகாக்கப்பட வேண்டிய மருத்துவத் தாவரப்பகுதிகளை (MPCA) கண்டறிந்து அழிவின் அபாயத்திலிருந்து தாவரங்களை காக்கும் செயலில் ஈடுபட்டுள்ளது. | அழியும் நிலையில் உள்ள தாவர இனங்களை அபிவிருத்தி செய்யும் மையமாக மருத்துவ தாவர அபிவிருத்தி பகுதி (MPDA) செயல்படுபடுகின்றன. |
| 3 | எ.கா. கொடைக்கானல், குற்றாலம் | எ.கா. தர்மபுரி, வேலூர் |

**4. நிலைப்படுத்தப்பட்ட முன்னேற்றம் என்பதை வரையறு.**

1. எதிர்கால தலை முறையினரின் வள உரிமை மற்றும் பாதுகாப்பை மனதில் கொண்டு தீட்டப்படும் வளர்ச்சி திட்டங்களே நிலைப்படுத்தப்பட்ட முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.
2. இயற்கை அளித்துள்ள கொடையான வளங்களை எதிர்கால தலைமுறையினரிடம் மிகக்குறைந்த பாதிப்போடு கொண்டு சேர்க்க வேண்டும்.

**ஒரு பத்தியில் விடை தருக.**

**1. நீர்வளப்பாதுகாப்பு பொதுவாகக் கையாளப்படும் முறைகளை எழுதுக.**

1. நீர்வளப்பாதுகாப்பு முறை மூலம் நீர் வீணாக்குவது தவிர்க்கப்படும்.

2. மழை நீர் சேமிப்பு முறை, சிறுதடுப்பு அணைகள் கட்டுதல் மூலம் மழை நீர் வீணாவது தடுக்கப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் உயர்த்தப்படுகிறது.
3. கழிவு நீரை முடிந்த அளவில் சுத்திகரித்து குறிப்பிட்ட செயல்களுக்கு பயன்படுத்துதல்.
4. மரங்களை அதிக அளவில் வளர்ப்பதன் மூலம் நீரினை ஈர்த்து நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்தி புதுப்பிக்க முடியும்.

**2. மண்வளப் பாதுகாப்பு முறைகளைப் பற்றி எழுதுக.**

1. வேளாண்துறை, கிராமப்புறங்களில் மண் பரிசோதனை கூடங்கள் அமைக்க வேண்டும்.
2. மண் பரிசோதனை கூடங்கள், விவசாயிகள் விஞ்ஞானப்பூர்வமாக மண்ணின் தன்மையை பரிசோதித்து, மண் மேம்பாட்டு வழிமுறைகளை பயன்படுத்தி மண் வளத்தை பாதுகாக்க உதவுகிறது.
3. மாவட்ட அளவில் மண் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு மண்வள நிலை மதிப்பீடு செய்யப்படுகிறது.
4. பொதுவாக மண் பாதுகாப்பு இரு வழிகளில் கையாளப்படுகின்றன. அவை: 1. மண் அரிப்பை தடுத்தல் 2. மண் வளத்தை தக்கவைத்தல்
5. “ஊடு பயிர் வளர்த்தல்” மூலம் மண் அரிப்பை தடுக்க முடியும்

**3. அப்பிகோ இயக்கம் பற்றி குறிப்பு வரைக.**

1. அப்பிகோ இயக்கம் கர்நாடக மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
2. மேற்கு தொடர்ச்சிமலையிலிருந்து கிழக்கு தொடர்ச்சி மலை வரை வனப்பாதுகாப்பு இயக்கமாக செயல்படுகிறது.
3. அப்பிகோ இயக்கத்தின் முக்கிய நோக்கம் எஞ்சியுள்ள அயண மண்டல ஈரக்காடுகளை பாதுகாப்பதாகும்.
4. அழியும் நிலையிலுள்ள பகுதிகளை தக்கவைக்கவும், காட்டுப்பொருட்களை சீரான வழியில் சிக்கனமாக உபயோகிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
5. அப்பிகோ இயக்கத்தின் மிகப்பிரபலமான முழக்க வாசகம் “பாதுகாக்க, வளர்க்க, விவேகமாக உபயோகிக்க” என்பதாகும்.
6. கிராமப்புறங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்று சக்தி ஆதாரங்களினால் வீடுகளில் சுமார் 40%விறகுகளின் அளவை குறைத்துள்ளது.

**4. உயிர்க் கோள சேமிப்புப் பெட்டகம் என்றால் என்ன?**

1. உயிர் கோள சேமிப்பு பெட்டகம் என்பது பிரத்தியேகமாக பாதுகாக்கப்பட்ட புவிப்பகுதிகளின் உலகளாவிய வலை அமைப்பாகும் .
2. பாதுகாப்பு முறைக்கும், முன்னேற்றத்திற்குமான தொடர்பினை உயிர்க்கோள சேமிப்புப் பெட்டகம் நிரூபணம் செய்கின்றது.

**உயிர்க் கோள சேமிப்புப் பெட்டகத்தின் மாதிரி செயல்பாடுகள்:**

1. நன்கு பாதுகாக்கப்பட்ட மையப்பகுதி.
2. கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படுகிறது.
3. சுற்றுலாவிற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் பயன்படுத்தப்படும் மாற்றமடையும் வெளிப்பகுதியாகும்.

**உயிர்க் கோள சேமிப்புப் பெட்டகத்தின் மாதிரி:**



# தமிழ்நாடு
## தேசியப் பூங்கா, பறவைகள் மற்றும் விலங்குகள் சரணாலயம்



# குடிமையியல்

## 1. தமிழகத்தின் தற்காலச் சமூகச்சிக்கல்கள்

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. சமூகத்தில் உடலுழைப்பை மேற்கொண்டவர்கள் **சூத்திரர்கள்** அல்லது **பஞ்சமர்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
2. **பிராமணர்கள்** தங்களது ஆகமங்களின் மூலமாகச் செல்வம் கொழிக்கும் கோயில்களுக்குப் பூசகர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டனர்.
3. வேதங்கள் மற்றும் **சுமிருதிகளில் தேர்ந்தவர்கள்** என்ற முறையில் நிரந்தர வருவாய் தரும் செழிப்பான கிராமங்களை மானியங்களாகப் பெற்றனர்.
4. உழைக்கும் உழவர்கள் மற்றும் கைவினைஞர்கள் **சூத்திரர்கள்** என அழைக்கப்பட்டனர். **நிலமற்ற கூலிகள்** பஞ்சமர்கள் என சிறுமைப்படுத்தபட்டனர்.
5. சாதியின் நீட்சியே **தீண்டாமை** ஆகும். சூத்திரர்கள் தீண்டாமையின் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர்.
6. 1912-ஆம் ஆண்டு **சி. நடேச முதலியார்** ஒரு திராவிட விடுதியை பிராமணரல்லாத மாணவர்களுக்காக நடத்தினார்.
7. **தியாகராய செட்டி** மற்றும் **டாக்டர். டி. எம். நாயர்** போன்றோர் **நீதிக்கட்சி** என்று மக்களால் அழைக்கப்பட்ட இயக்கத்தை உருவாக்கினார்.
8. நீதிக்கட்சியின் ஆட்சிக்கால கட்டத்தில் **வகுப்பு உரிமை ஆணை** மூலம் அரசு வேலை வாய்ப்பில் அந்தந்த வகுப்புகளின் மக்கள் தொகைக்கேற்ப இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.
9. **சமஸ்கிருதம் கட்டாயம்** என்ற பிரிவை நீக்கியதின் மூலம் பிராமணரல்லாதவர் மருத்துவ கல்லூரிகளில் சேருவதற்கு வாய்ப்பு கிடைத்தது.
10. செல்வ வளம் மிக்க கோயில்களின் மீது இருந்த பிராமணரின் ஏக போக ஆதிக்கம் **இந்து சமய அறநிலையத்துறை** மூலம் கட்டுப்படுத்தப்பட்டது.
11. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவரான **டாக்டர். முத்துலெட்சுமி** ரெட்டியின் அயராத முயற்சியால் **தேவதாசி முறை** ஒழிக்கப்பட்டது.
12. நிலமற்ற வேலையாட்களின் நிலையை உயர்த்த **மிராசுதாரர் முறை** ஒழிக்கப்பட்டது.
13. நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் **சென்னை சிந்தாதிரிப்பேட்டை** பள்ளியில் ஏழைக்குழந்தைகள் தொடர்ந்து கல்வி பெறுவதை ஊக்குவிப்பதற்காக **மதிய உணவுத்திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது.
14. தயானந்த சரஸ்வதி சாதியை வெறுக்கின்ற அதே நேரத்தில் **வருணாசிரம முறையை** நியாயப்படுத்தினார்.
15. தமிழ்நாட்டில் **சித்தர், இராமலிங்க வள்ளலார், வைகுந்த சாமி** ஆகியோர் சாதிமுறையை எதிர்த்தனர்.
16. சென்னை மாகாணத்தின் **இரட்டையாட்சி** சட்ட மன்றத்தில் பிராமணர் அல்லாதோருக்கு சில இடங்களை ஒதுக்கீடு செய்தது.
17. அரசுப்பணிகளில் விகிதாச்சார அடிப்படையில் அனைத்து சமூகப் பிரிவுகளுக்கும் இட ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யவும் **வகுப்புவாரி அரசாணை** என்பது முக்கிய நடவடிக்கையாகும்.
18. **ஈ.வெ.இராமசாமி** சாதிமுறைக்கு எதிரான ஒரு தீவிரமான போராளி ஆவார். கேரளாவில் வைக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் தலைமை பொறுப்பை ஏற்றிருந்தார்.
19. பெரியார் வ.வே.சு.அய்யரால் நடத்தப்பட்ட வந்த சேரன்மாதேவி குருகுலத்தில் **வர்ணாசிரம் பாகுபாடு** பின்பற்றப்படுவதை எதிர்த்தார்.
20. பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் அரசியல் மற்றும் ஆட்சித்துறைகளில் **வகுப்புவாரி பிரதிநிதித்துவம்** கிடைத்திட போராடினார்.
21. பெரியார் புரோகிதம் தவிர்த்த **சுயமரியாதை** திருமணமுறைகளையும் அறிமுகப்படுத்தினார்
22. பெரியார் **குடியரசு, புரட்சி, விடுதலை** என்ற தமிழ் இதழ்களையும், **ரிவோல்ட்** என்ற ஆங்கில இதழையும் வெளியிட்டு தன்னுடைய கொள்கைகளை பரப்பினார்.
23. இராமசாமி அவர்கள் பெண்கள் உரிமைகளுக்காக நடத்திய போராட்டங்கள் அவருக்கு **பெரியார்** என்ற பட்டத்தை பெற்று தந்தது.
24. இந்தியாவின் மாபெரும் சிந்தனையாளர்களான புத்தர், மகாவீரர் முதல் ஜோதிபா பூலே, வள்ளலார், பெரியார், மற்றும் அம்பேத்கர் வரை சாதியற்ற சமயத்தை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினர்.
25. 19-ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் சமூகத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்ட **அரசு நிதியுதவி திட்டம்** கிராமங்களில் அதிகமாக பள்ளிகளை உருவாக்கியது.

26. காமராஜர் அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட **மதிய உணவுத் திட்டம்** எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் சத்துணவு திட்டமாக மேம்பாடு அடைந்தது.
27. தாழ்த்தப்பட்டவர்களை காந்திஜி இந்துக்களாக அங்கீகரித்து **ஹரிஜன்கள்** எனப் பெயரிட்டார்.
28. காந்தி **ஹரிஜன்** என்ற இதழை நடத்தி அவர்களை உயர்த்தும் திட்டங்களை காங்கிரஸ் கட்சிக்குள் கொண்டு வந்தார்.
29. தமிழ்நாட்டில் **அயோத்திதாச பண்டிதர்** புத்த மதத்தை தழுவுவதற்கு ஆதரவாக தன் கருத்துகளை தெரிவித்தார்.
30. 1938-ஆம் ஆண்டு இராஜாஜி தலைமையில் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை ஹரிஜன்கள் இந்துக் கோயில்களுக்குள் நுழைய கோயில் நுழைவுச் சட்டங்களை கொண்டு வந்தது.
31. குழந்தை தொழிலாளி என்பது குழந்தைகளில் ஒரு பிரிவினர் ஊதியம் பெற்றோ அல்லது பெறாமலோ **உழைப்பில் பங்கெடுத்தல்** ஆகும்.
32. **குழந்தை தொழிலாளர்** என்பது 6 வயதிலிருந்து 15 வயது வரை பள்ளிக்கு செல்லாமல் உழைக்கும் குழந்தை அல்லது தொழிற்பயிற்சியை பயிலுபவரைக் குறிக்கும்.
33. கம்பளம் நெய்தல், தீப்பெட்டி தொழிற்சாலை, பட்டாசு தொழிற்சாலை, பீடி சுற்றுதல், வீட்டுவேலை செய்தல், பிச்சையெடுத்தல் போன்றவை **குழந்தை தொழிலுக்கான களங்கள்** ஆகும்.
34. குழந்தைகளின் பொருளாதார பங்களிப்பு ஒரு முக்கிய காரணமாயிருந்து குறைந்த சம்பளத்தில் மேன்மேலும் குழந்தை தொழிலாளர் தேவை என்ற நிலையை உருவாக்குகிறது.
35. **அரசியலமைப்பு சட்டம் 24 வது பிரிவு** 14 வயதிற்குட்பட்ட எந்தக் குழந்தையும் தொழிற்சாலை மற்றும் சுரங்கம் போன்ற ஆபத்தான வேலைகளில் அமர்த்தக் கூடாது என்பதை தெளிவாகக் கூறுகிறது.
36. இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி, மதிய உணவுத் திட்டம் மற்றும் பிற ஊக்குவிப்புகள் குழந்தைகள் தொழிலாளர்களாக மாறுவதை குறைப்பதற்கு வழியாக அமைந்துள்ளது.
37. **இடம் பெயர்ந்த தொழிலாளர்கள்** சாலை அமைத்தல், கல்குவாரி, செங்கல் சூளை போன்ற ஆபத்தான வேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.
38. இடம்பெயர்ந்த வேலையாட்கள் **கொத்தடிமைகளாக** நடத்தப்படுகிறார்கள்.
39. 1970ஆம் ஆண்டுகளில் இருந்து **டிரான்ஸ் ஜென்டர்** என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.
40. 1980ஆம் ஆண்டில் குறியீட்டு பெயராக இருந்த டிரான்ஸ் ஜென்டர் என்ற சொல் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. இந்த பிரிவினரைத் **திருநங்கையர்** என்று தமிழில் அழைக்கிறோம்.
41. திருநங்கையரைத் தனியான மூன்றாவது பால் பிரிவினராக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு குடும்ப அட்டைகளை வழங்கும் முதல் மாநிலமாகத் **தமிழ்நாடு** சிறப்புப் பெற்றுள்ளது.
42. உலகிலேயே முதன்முதலாகத் திருநங்கையருக்கு என **திருமணத் தகவல் மின்வலை** சென்னையில் துவங்கப்பட்டுள்ளது.
43. இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் **கடலூர் மாவட்ட நிர்வாகம்** திருநங்கையர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு முன் மாதிரிக் குடியிருப்புகளை உருவாக்க முன் வந்துள்ளது.
44. நாட்டிலேயே முதல் முறையாகக் திருநங்கையருக்கு கல்லூரிகளில் இடமளிக்கும் அரசாணையை **மாநில உயர்க்கல்வித்துறை** வெளியிட்டுள்ளது.
45. **சுதந்திரம்** என்பது சமத்துவமற்ற நிலை மற்றும் சுரண்டப்படும் நிலையிலிருந்து விடுதலை பெறுவதாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. பிராமணர் அல்லதவர்களுக்கு விடுதியை நடத்தியவர் ..................**

அ) பிட்டி தியாகராஜச் செட்டி ஆ) டாக்டர். டி.எம் நாயர் **இ) சி.நடேச முதலியார்** ஈ) டாக்டர்.அம்பேத்கர்

**2. டாக்டர். முத்துலெட்சுமி அவர்களால் முடிவுக்கு வந்தது ...............**

அ) சாதி முறை ஆ) மிராசுதாரி முறை **இ) தேவதாசி முறை** ஈ) பிராமணர் அல்லாதோர் இயக்கம்

**3. சுயமரியாதை இயக்கத்தை நடத்தியவர் .....................**

அ) காமராசர் ஆ) சி.என். அண்ணாதுரை **இ) பெரியார்** ஈ) டாக்டர்.டி.எம்.நாயர்

**4. மாநில சமூக இடஒதுக்கீட்டுக் கொள்கையில், அடிப்படை உரிமையில் முதல் சட்டதிருத்தத்தை கொண்டு வந்தவர்.**

அ) வி.வி. சுப்பிரமணிய ஐயர் ஆ) மகாத்மா காந்தி இ) டாக்டர். முத்துலெட்சுமி **ஈ) பண்டித ஜவஹர்லால் நேரு**

**5. பஞ்சமர் நிலச்சட்டத்தின்படி நிலங்கள் வழங்கப்பட்டது.....................**

அ) பிராமணர் ஆ) அர்ச்சகர் இ) கோயில் **ஈ) தாழ்த்தப்பட்ட சமுதாயம்**

**குறுகிய விடையளி:**

**1. தமிழ்நாட்டில் சமுதாயத்தில் காணப்படும் சமத்துவமின்மைகள் யாவை?**

1. இந்தியாவில் சாதி முறை சமூக அந்தஸ்து, பொறுப்புகள், வேலைவாய்ப்புகள் போன்றவை மக்களின் பிறப்பை ஒட்டியே தீர்மானிக்கப்படுகிறது.
2. கல்வி, அரசு வேலைவாய்ப்புகள், கோயில் உரிமைகள், சொத்து மற்றும் வழித்தடங்கள், குளங்கள் போன்றவை சமத்துவமின்மையால் சில மக்களுக்கு விலக்கப்பட்டிருந்தன.

**2. பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை?**

1. பக்தி இயக்கம் மூலமாக கோயில்முறை மிகமுக்கிய, அரசியல், பொருளாதார காரணியாக மாறியது.
2. பிராமணர்கள் தங்களின் “ஆகமங்களின்” மூலம் செல்வம் கொழிக்கும் கோயில்களுக்கு பூசகர்களாயினர்.
3. வேதங்கள் மற்றும் சுமிருதிகளில் பிராமணர்கள் தேர்ந்தவர்கள் என்ற முறையில், நிரந்தர வருவாய் தரும் செழிப்பான கிராமங்களை மானியங்களாக பெற்றனர்.

**3. நீதிக்கட்சி பற்றி சிறு குறிப்பு வரைக.**

1. பி. தியாகராய செட்டி மற்றும் டாக்டர் டி.எம். நாயர் போன்றோர் நீதிக்கட்சியை உருவாக்கினார்கள்.
2. நீதிக்கட்சி பிராமணர் அல்லாதவர்களுக்கு அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்பிற்காக செயல்பட்டது.

**4. வர்ணாஸ்ரமம் மற்றும் சாதிய முறைகளை எதிர்த்தோர் யாவர்?**

1. தமிழ்நாட்டில் சித்தர், இராமலிங்க வள்ளலார் மற்றும் வைகுந்தசாமி ஆகியோர் சாதிமுறைகளை எதிர்த்தனர்.
2. மகாராஷ்டிராவில் ஜோதிபா பூலே மற்றும் சாகு மகாராஜ் ஆகியோர் எதிர்த்தனர்.
3. கேரளாவில் நாராயண குருவும், தமிழ்நாட்டில் அயோத்திதாச பண்டிதர் போன்றோர் வர்ணத்தையும், சாதிய முறைகளையும் மறுத்தனர்.

**5. சுயமரியாதைத் திருமணங்கள் என்றால் என்ன?**

1. பெரியார் சுயமரியாதை திருமணங்களை அறிமுகப்படுத்தினார்.
2. புரோகிதம் தவிர்த்த சடங்குகளின்றி நடைபெறும் திருமணங்கள் சுயமரியாதை திருமணங்கள் எனப்பட்டன.

**6. குழந்தைத் தொழிலாளர் - வரையறு.**

1. குழந்தை தொழிலாளர் என்பவர் பகல் வேளையில் பள்ளிக்கு செல்லாமல் உழைக்கும் குழந்தை ஆகும்.
2. 6 முதல் 15 வயதுவரை உள்ள வேலைக்குச் செல்லும் குழந்தைகள் குழந்தை தொழிலாளர் எனப்பட்டனர்.

**பத்தியளவில் விடையளி.**

**1. தமிழ்நாட்டில் காணப்படும் சமூகப் பிரச்சனைகள் சிலவற்றைக் குறிப்பு எழுதுக.**

1. **அ) சமூக ஏற்றத்தாழ்வுகள்:** சாதி முறை சமூக அந்தஸ்து, பொறுப்புகள், வேலைவாய்ப்புகள் போன்றவை மக்களின் பிறப்பை ஒட்டியே தீர்மானிக்கப்படுகிறது.
2. சமூகத்தில் பெரும்பான்மையோர் கைவினைஞர்கள் போன்று உடலுழைப்பை மேற்கொண்டவர்கள். இவர்கள் சூத்திரர்கள் என்றும் நிலமற்றகூலிகள் பஞ்சமர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
3. கல்வி, அரசுவேலைவாய்ப்புகள், கோயில் உரிமைகள், சொத்து மற்றும் வழித்தடங்கள், குளங்கள் போன்றவை சூத்திரர்களுக்கு விலக்கப்பட்டிருந்தன.
4. **ஆ) சாதி ஏற்றத்தாழ்வுகள்:** சங்ககாலத்தில் சதுர்வர்னா அடிப்படையிலான ஜாதி முறை இல்லை.
5. பல்லவர்கள் மற்றும் சோழர்கள் காலத்தில் தான் பிராமணர்கள் சமூகத்தில் உயர்நிலையை அடைந்தனர். வேதங்கள் மற்றும் சுமிருதிகள் மூலமாக மன்னரைக் கவர்ந்தனர்.
6. **இ) தீண்டாமைக் கொடுமைகள்:** சாதியின் ஒரு தீட்சியே தீண்டாமை ஆகும். சூத்திரர்களும் தீண்டாமை கொடுமைக்கு, இழிவுகளுக்கும் ஆளாக்கப்பட்டனர்.
7. பிராமணர்கள் தங்களின் “ஆகமங்களின்” மூலமாக செல்வம் கொழிக்கும் கோயில்களுக்கு பூசகர்களாக இருந்தனர். தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் செல்ல அனுமதியில்லை.
8. வேதங்கள் மற்றும் சுமிருதிகளில் தேர்ந்தவர்கள் என்ற முறையில், நிரந்தர வருவாய் தரும் செழிப்பான கிராமங்களையும் பிராமணர்கள் மானியங்களாக பெற்றனர்.
9. **ஈ) குழந்தை தொழிலாளர் பிரச்சினை:** குழந்தை வருவாய் பெறுவதற்காக பல தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.
10. பெற்றோரின் குறைந்த வருமானத்தால், குழந்தைகள் கல்வியை துறந்து வேலைக்கு செல்கின்ற நிலை ஏற்படுகிறது.

**2. தீண்டாமையைப் பற்றி கூர்ந்து ஆய்வு செய்க.**

1. இந்தியாவில் தீண்டாமை என்பது அடிமைத்தனம் “இனவெறி”யை விட மோசமானதாகும்.
2. தீண்டத்தகாதவர்கள் பொதுகிராமங்கள் மற்றும் நகரங்களில் வசிக்க அனுமதியில்லை.
3. கோயில்களுக்குள் நுழைய தீண்டத்தகாதவர்களுக்கு அனுமதியில்லை.
4. அலுவலக பணிகளை செய்யும் உரிமை மற்றும் நீதிமன்ற நீதியை பெறவும் தீண்டத்தகாதவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

5. தீண்டத்தகாத பெண்கள் மேலாடை அணியக் கூடாது. குடை பிடிக்கக்கூடாது. நாகரீகமான பெயர்களை வைக்கக்கூடாது என அனுமதி சிறுமைப்படுத்தப்பட்டனர்.
6. 20 ஆம் நூற்றாண்டில் பஞ்சமர்கள் சூத்திரர்கள் பொது போக்குவரத்து வாகனம், சிற்றுண்டி சாலைகளை பயன்படுத்த அனுமதிக்கவில்லை. அவர்களை மனிதர்களாகவே மதிக்கவில்லை.
7. இந்துக்கள் பலர் கிருஸ்தவ மதத்தை தழுவினர்.
8. இந்து மத தலைவர்களான தயானந்த சரஸ்வதி, ஜி.சுப்பிரமணிய ஐயர் மற்றும் மகாத்மா காந்தி போன்றோர் தீண்டாமையை ஒழிப்பதில் அக்கறை காட்டினர்.
9. காந்தி அவர்கள் தீண்டத்தகாதவர்களுக்கு "ஹரிஜன்கள்" என்று பெயரிட்டு அழைத்தார்.
10. தமிழ்நாட்டில் பெரியாரும், டாக்டர் அம்பேத்கரும் ஆக்கபூர்வமாக செயல்பட்டு பிற்படுத்தபட்டபிரிவினரும் சமமாக மற்ற பிரிவினருடன் வாழ பல மாற்றங்களை கொண்டுவந்தார்.

**3. குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பில் அரசின் பங்கு யாது?**

**குழந்தை தொழிலாளர்:**

1. குழந்தை தொழிலாளர் என்பவர் பகல் வேளையில் பள்ளிக்கு செல்லாமல் உழைக்கும் குழந்தை ஆகும்.
2. 6 முதல் 15 வயதுவரை உள்ள வேலைக்குச் செல்லும் குழந்தைகள் குழந்தை தொழிலாளர் ஆவர்.

**குழந்தை தொழிலாளர்கள் தடுப்பில் அரசின் பங்கு:**

1. இந்திய அரசியலமைப்புச்சட்டம் 24 வது பிரிவின்படி, 14 வயதிற்குட்பட்ட எந்த குழந்தையும் தொழிற்சாலை மற்றும் சுரங்கம் அல்லது பிற ஆபத்தான வேலைகளில் அமர்த்தக்கூடாது.
2. அரசியலமைப்புச்சட்டம் தவிர்த்து குறைந்தது 13 முக்கிய சட்டங்கள் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**குழந்தை தொழிலாளர் முக்கிய சட்டங்கள்:**

அ) குழந்தை தொழிலாளர் சட்டம் - 1938
ஆ) தொழிற்சாலை சட்டம் - 1948
இ) பண்ணை தொழில்சட்டம் - 1951
ஈ) சுரங்கசட்டம் - 1952
உ) வணிக கப்பல்சட்டம் - 1950
ஊ) மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் - 1961

4. இலவச மற்றும் கட்டாய ஆரம்பக்கல்வி, மதிய சத்துணவுத் திட்டம் மற்றும் பிற ஊக்குவிப்புகள் குழந்தைகள் தொழிலாளர்களாக மாறுவதை குறைப்பதற்கு வழியாக அமைந்துள்ளது.

**4. தமிழ்நாட்டில் திருநங்கையர்கள் பற்றி குறிப்பு எழுதுக.**

1. 1980ல் பிறவியிலேயே ஆண்-பெண் பாலினங்களில் வராத அனைத்து மனிதர்களின் குறியீட்டு பெயராக 'டிரான்ஸ்ஜென்டர்' என்ற சொல் அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.
2. திருநங்கையர்களை மூன்றாவது பாலினமாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
3. உலகில் திருநங்கையர்களுக்கு தனியாக திருமணத் தகவல் மையம் சென்னையில் முதன்முதலில் துவங்கப்பட்டுள்ளது.
4. திருநங்கையர்கள் உடலால் முழுமையாக பெண்களாக இல்லாவிட்டாலும் மனதாலும், உணர்வாலும் தங்களை பெண்களாகவே கருதிக்கொள்பவர்கள்.
5. கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், போன்ற இடங்களில் திட்டமிடப்பட்டுள்ள முன் மாதிரி திருநங்கையர் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
6. திருநங்கையர்களுக்கு அரசினால் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள திருநங்கையர்கள் நலவாரியம் அவர்களுக்கு பல்வேறு நல திட்டங்களை நிறைவேற்ற உதவியாக உள்ளது.
7. திருநங்கையர்கள் ஒவ்வொருவருக்கும் 3 சென்ட் வீட்டு மனையும், அதில் 308 சதுரஅடியில் வீடுகள் கட்டிக்கொள்ள கடனுதவியும் தரப்படவுள்ளன.
8. கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்கும் போது ஆண் - பெண் - திருநங்கையர் என்று மூன்று பாலினங்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.
9. திருநங்கையருக்கு வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக கணினிப் பயிற்சியை அளிக்கவும் தமிழக அரசு முன்வந்துள்ளது.

**5. அமைப்பு சாராத் தொழிலாளர்கள் குறித்து விவரிக்கவும்.**

1. அமைப்புசாரா தொழிலாளர்களின் அவலநிலை குறித்து விழிப்புணர்வு தற்பொழுது வளர்ந்து வருகிறது.
2. அமைப்பு சாரா தொழிலாளர்களை பொறுத்த வரையில் பணிபுரிபவர் - பணிதருபவர் பந்தமின்றி சமூகபாதுகாப்பு முறைகள் ஏதுமின்றி உள்ளது.
3. அமைப்பு சாரா தொழிலாளர்களில் வேளாண்மை தொழிலாளர்கள், சாலைத் தொழிலாளர்கள், சூளைத் தொழிலாளர்கள், பீடி சுருட்டுபவர்கள், துணி நெய்பவர்கள், கட்டிட வேலையாட்கள் ஆகியோர் அடங்குவர்.
4. அமைப்பு சாரா தொழிலாளர்கள தங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட பணி தருபவர் இல்லாமல், தங்களுக்கு எந்த வேலை உத்திரவாதமும் இல்லாமல் வாழ்க்கையை தேடி அலைகின்றனர்.
5. பெண்கள் அமைப்பு சாரா தொழிலாளர்கள் எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர்.
6. இந்தியாவில் அமைப்புசாரா பணியாளர்களில் 39.7% பேர் வறுமை கோட்டிற்கும் கீழ் உள்ளனர்.

# பொருளியல்

## 1.சமநிலை விலை

**படிக்க வேண்டிய முக்கிய பாடக் குறிப்புகள்:**

1. ஒரு குறிப்பிட்ட விலையில் வாங்கப்படும் அளவும் விற்கப்படும் அளவும் சமமாக இருந்தால் **சமநிலை விலை** எனப்படும்.
2. விலை சமநிலை விலையை விட அதிகமானால் அளிப்பு தேவையை விட அதிகமாக இருக்கும்.
3. அளிப்பு தேவையை விட அதிகமாக இருந்தால் **மிகை அளிப்பு** எனப்படும்.
4. விலையானது சமநிலை விலையை விடக் கூடினாலும் குறைந்தாலும் தேவையும் அளிப்பும் அதற்கேற்ப மாறி சமநிலை விலையை மறுபடியும் நிலை நிறுத்தும். இது **அங்காடிச் சமநிலை** எனப்படும்.
5. **மிகக் குறுகிய காலம்** என்பது தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை மாற்ற முடியாத காலம் ஆகும்.
6. **குறுகிய காலம்** என்பது தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை ஓரளவு மாற்றியமைக்க இயலும் காலம் ஆகும்.
7. அங்காடி காலத்தில் அளிப்பு நிலையானது. தேவை உயர உயர அளிப்பு உயராத காரணத்தினால் விலை உயரும்.
8. அங்காடி காலத்தில் தேவையே விலையினை தீர்மானிக்கும் காரணியாகும்.
9. குறுகிய காலத்தில் அளிப்பு சிறிது மட்டுமே மாறுவதால் தேவை உயர்வு ஒரு சிறுவிலை உயர்வையும் காலத்தைவிட தேவைக்குறைவு சிறு விலை குறைவையும் உண்டாக்குகிறது.
10. **நுகர்வு மற்றும் வறுமை குறித்த ஆய்வு**க்காக பிரிட்டன் பேராசிரியர் ஆங்கஸ் டீட்டனுக்கு 2015-ஆம் ஆண்டின் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (புத்தக வினாக்கள்)**

**1. சமநிலை விலை கீழ்க்கண்டவற்றுள் எதனைச் சமன்படுத்துகிறது?**

**அ) தேவை மற்றும் அளிப்பை** ஆ) தேவை மற்றும் வருமானத்தை
இ) அளிப்பு மற்றும் உற்பத்தியை ஈ) தேவை மற்றும் பயன்பாட்டை

**2. அளிப்பு நிலையாக இருக்கும் காலம்.**

**அ) மிகக் குறுகிய காலம்** ஆ) குறுகிய காலம் இ) நீண்ட காலம் ஈ) மிக நீண்ட காலம்

**குறுகிய விடையளி:**

**1. சமநிலை என்றால் என்ன?**

1. ஒரு குறிப்பிட்ட விலையில் தேவைப்படும் பண்டத்தின் அளவும், அளிக்கப்படும் பண்டத்தின் அளவும் சமமாகும்.
2. இந்த விலையில் வாங்கப்படும் அளவும், விற்கப்படும் அளவும் சமமாகும். இவ்விலையே சமநிலை என்பர்.

**2. குறுகிய காலம் என்றால் என்ன?**

குறுகிய காலம் என்பது தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை ஓரளவு மாற்றியமைக்க இயலும் காலம் ஆகும்.

| விலை (ரூபாயில்) | தேவை (கி.கிராமில்) | அளிப்பு கி.கிராமில் |
|---|---|---|
| 20 | 5 | 1 |
| 40 | 4 | 2 |
| 60 | 3 | 3 |
| 80 | 2 | 4 |
| 100 | 1 | 5 |

**ஒரு பத்தியில் விடையளி.**

**1. சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?**

1. ஒரு கிலோ மாம்பழத்தின் விலை ரூ. 20 ஆக உள்ள போது தேவை 5 கிலோவாகவும் அளிப்பு 1 கிலோவாகவும் உள்ளது.
2. விலை ரூ.40 ரூ.60. ரூ.80 மற்றும் ரூ.100 என அதிகரிக்கும் போது மாம்பழத்தின் தேவை 4 கி, 3 கி, 2 கி, மற்றும் 1 கி என்று குறைந்தும், மாம்பழத்தின் அளிப்பும் 2 கி, 3 கி, 4 கி, மற்றும் 5 கி என அதிகரித்து கொண்டே செல்கிறது.
3. ஒரு குறிப்பிட்ட விலையில் மாம்பழத்தின் தேவையும், அளிப்பும் சமமாகிறது.
4. கிலோ ரூ.60 என்கிற விலையில் தேவையும், அளிப்பும் சமமாகி 3 கிலோவாக உள்ளது. இது சமநிலைவிலை எனப்படும்.
5. விலை சமநிலை விலையை விட அதிகமாக இருந்தால் அளிப்பு தேவையை விட அதிகமாக இருக்கும்.
6. விற்பனையாளர் 4 கிலோ விற்க விரும்புவோர் ஆனால் நுகர்வோர் 2 கிலோ மட்டுமே வாங்க விரும்புவர். எனவே அளிப்பு தேவையை விட அதிகமாக உள்ளது.
இவ்வாறு சமநிலையைவிடக் கூடினாலும் குறைந்தாலும் தேவையும், அளிப்பும் அதற்கேற்ப மாறி சமநிலை விலையை மறுபடியும் நிலை நிறுத்தும். இது அங்காடி சமநிலை எனப்படும்.

# தொகுத்தறி மதிப்பீடு
# மூன்றாம் பருவத்தேர்வு மாதிரி வினாத்தாள்

**9-ம் வகுப்பு - சமூக அறிவியல்**

**காலம்: 2.30 மணி** **மதிப்பெண்கள்: 60**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 13x1=13**

1. பிரெஞ்சு புரட்சி நடைபெற்ற ஆண்டு .........
   அ) 1749 ஆ) 1759 இ) 1779 ஈ) 1789
2. பிரான்சின் சின்னமாக விளங்கியது.
   அ) வெர்செயில்ஸ் சிறை ஆ) பாஸ்டைல் சிறை இ) பெர்லின் சிறை ஈ) வார்னஸ் சிறை
3. பிரெஞ்சு புரட்சியின் குழந்தை என்று அழைக்கப்பட்டவர் .........
   அ) பதினாறாம் லூயி ஆ) ரோபஸ்பியர் இ) வால்டேர் ஈ) நெப்போலியன் போனபர்ட்
4. தமிழ்மொழி குறைந்தபட்சம் ..... ஆண்டுகள் தொடர்ச்சியான வரலாற்றை உடையது.
   அ) 3500 ஆ) 2500 இ) 1500 ஈ) 4000
5. சங்ககாலத் தமிழர்களின் சமூக நிலையை ........விளக்குகிறது.
   அ) மணிமேகலை ஆ) தொல்காப்பியம் இ) பத்துப்பாட்டு ஈ) எட்டுத்தொகை
6. பிராமணர் அல்லாதவர்களுக்கு விடுதியை நடத்தியவர் .......
   அ) பிட்டி தியாகரஜசெட்டியார் ஆ) டாக்டர்.டி.எம்.நாயர்
   இ) சி.நடேச முதலியார் ஈ) டாக்டர். அம்பேத்கர்
7. பஞ்சமி நிலச்சட்டத்தின்படி நிலங்கள் வழங்கப்பட்டது.
   அ) பிராமணர் ஆ) அர்ச்சகர் இ) கோயில் ஈ) தாழ்த்தப்பட்ட சமுதாயம்
8. .........மாவட்டம் வெடிபொருள்களை ஏற்றுமதி செய்கிறது.
   அ) வேலூர் ஆ) விழுப்புரம் இ) விருதுநகர் ஈ) சிவகாசி
9. தமிழ்நாட்டில் .........மாவட்டம் கல்வியறிவில் முதன்மை வகிக்கிறது.
   அ) கரூர் ஆ) கன்னியாக்குமரி இ) சென்னை ஈ) பெரம்பலூர்
10. அதிக அளவு செயற்கை இரசாயன உரங்கள் உபயோகிப்பதால் .........தரம் குறைகிறது.
    அ) காற்று ஆ) மண் இ) ஆறுகள் ஈ) கடல்
11. காட்டுப்பொருள்கள் சீராகக் கிடைக்க ஒரு பகுதியில் ......பங்கு காடாக இருக்க வேண்டும்.
    அ) நான்கில் மூன்று ஆ) மூன்றில் இரண்டு இ) மூன்றில் ஒன்று ஈ) ஐந்தில் ஒன்று
12. விலங்குகள் அதன் வாழும் இடத்திலேயே பாதுகாத்தல் ......... ஆகும்.
    அ) பராமரித்தல் ஆ) சரணாலயம் இ) பூங்கா ஈ) மிருகக்காட்சி சாலை
13. அளிப்பு நிலையாக இருக்கும் காலம் .....
    அ) மிகக் குறுகிய காலம் ஆ) குறுகிய காலம் இ) நீண்ட காலம் ஈ) மிக நீண்ட காலம்

**II. பொருத்துக. 5x1=5**

| | | |
|---|---|---|
| 14.சட்டத்தின் சாரம் | - | இசைவாணர் |
| 15.பாணர் | - | மாண்டெஸ்கியூ |
| 16.முதல் உழவர் சந்தை | - | பூச்சிக்கொல்லி |
| 17.நீர் மாசடைதல் | - | யானை பாதுகாப்பகம் |
| 18.முதுமலை | - | மதுரை |

**III. சுருக்கமான விடையளி. (எவையேனும் இரண்டிற்கு)(வரலாறு) 2x2=4**

19. பிரெஞ்சு சட்டமன்றத்தின் மூன்று பிரிவுகள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
20. நெப்போலியன் போனபர்ட் என்பவர் யார்?
21. சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட புகழ்பெற்ற கோவில்கள் சிலவற்றைக் கூறுக.
22. சித்த மருத்துவம் என்றால் என்ன?

**எவையேனும் ஒன்றிற்கு விடையளி. (குடிமையியல்)** **1x2=2**

23.வர்ணாஸ்ரமம் மற்றும் சாதிய முறைகளை எதிர்த்தோர் யாவர்?
24.சுயமரியாதைத் திருமணங்கள் என்றால் என்ன?

**ஏதேனும் மூன்றனுக்கு விடையளி. (புவியியல்)** **3x2=6**

25.வர்த்தகம் என்றால் என்ன?
26.மகளிர் சுயஉதவிக்குழு குறித்து எழுதுக.
27.காடுகள் அழிக்கப்படுதல் என்றால் என்ன?
28.பைங்குடில் வாயுக்கள் என்று அழைக்கப்படும் பசுமை வீட்டு விளைவு வாயுக்கள் சிலவற்றைக் கூறுக.
29.எல்லா வளங்களையும் ஏன் பாதுகாத்து பராமரிக்க வேண்டும்?

**ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி. (பொருளியல்)** **1x2=2**

30.சமநிலை விலை என்றால் என்ன?
31.குறுகிய காலம் என்றால் என்ன?

**IV. எவையேனும் இரண்டை வேறுபடுத்துக.** **2x2=4**

32.உள்நாட்டு வணிகம் - வெளிநாட்டு வணிகம்
33.பிறப்பு விகிதம் - இறப்பு விகிதம்
34.பாதுகாத்தல் - பராமரித்தல்
35.பாதுகாக்கப்பட வேண்டிய மருத்துவ தாவரப்பகுதி - மருத்துவ தாவர அபிவிருத்திப்பகுதி

**V. தலைப்பு வினா (ஏதேனும் ஒன்று மட்டும்)** **1x4=4**

**36. எதேச்சதிகார ஆட்சி**

அ) பிரெஞ்சு அரசு எந்தக்கொள்கையின் மீது சார்ந்துள்ளது?
ஆ) இக்கொள்கையை ஆதரித்தவர்கள் யார்?
இ) ஸ்டேட்ஸ் ஜெனரல் என்பது யாது?
ஈ) பிரெஞ்சு புரட்சிக்கு முன் கடைசியாக எப்போது இந்த அவை கூட்டப்பட்டது?

**37. சங்க இலக்கியம்**

அ) இரட்டைக் காப்பியங்களின் பெயர்களை கூறு.
ஆ) சங்க இலக்கியத்தில் எத்தனை பெருங்காப்பியங்கள் உள்ளன?
இ) எந்தத் தமிழ் இலக்கியத்தில் போரும் காதலும் விவரிக்கப்பட்டுள்ளது?
ஈ) பக்தி இலக்கியத்தைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.

**VI. விரிவான விடையளி.** **2x5=10**

38. அ) பிரெஞ்சுப்புரட்சியின் விளைவுகள் யாவை? (அல்லது)
ஆ) சங்ககால நிர்வாக முறையை விவரி. (அல்லது)
இ) குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பில் அரசின் பங்கு யாது?

39. அ) வர்த்தகம் ஏன் வியாபாரத்தின் இயக்க இயந்திரம் எனக்கூறப்படுகிறது? (அல்லது)
ஆ) பாழ்பட்டு வரும் சுற்றுசூழலைப் பாதுகாக்க மனிதனின் பங்கு யாது? (அல்லது)
இ) சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

**VII. கொடுக்கப்பட்டுள்ள இடங்களை உலக வரைபடத்தில் குறிக்க.** **5x1=5**

40. 1. பிரான்ஸ் 2. அட்லாண்டிக் பெருங்கடல்
3. ஐரோப்பா 4. இந்தியா
5. ஆசியா

**VIII.கொடுக்கப்பட்டுள்ள இடங்களை தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்க.** **5x1=5**

41. 1. சென்னை 2. மன்னார் வளைகுடா
3. கோடியக்கரை 4. முதுமலை
5. கன்னியாக்குமரி